Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு+II

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

**தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்**



அசல் 22 கரட் தங்க நகைகளையும், ஓடர் நகைகளையும் குறித்த நேரத்தில் உத்தரவாதத்துடன் செய்து பெற்றுக்கொள்ள

**கணேசா நகையகம்**

194, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

T.P. : 021 222 5987

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 பங்குனி - 31 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ற.அவ்வல் 03 (13.04.2005) புதன்கிழமை இதழ்:196

## அரசின் அடக்குமுறைக்கு எதிராக தென்மராட்சியில் மக்கள் பேரணி!

(சாவகச்சேரி)

தமிழ் மக்கள் மீது இலங்கை அரசாங்கத்தாலும், இராணுவத்தாலும் மேற்கொள்ளப்பட்டு வரும் அடக்குமுறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் - தென்மராட்சிப் பகுதியில் நேற்று மாபெரும் கண்டனப்பேரணி ஒன்று நடைபெற்றது.

நேற்றுக்காலை சாவகச்சேரி பஸ் நிலையத்தின் முன்பாக பொது அமைப்புகளைச் சேர்ந்த பெருமளவானோர் ஒன்றுகூடி - பதாதைகளை ஏந்தியவாறும், கோஷங்களை எழுப்பியவாறும் பேரணியாகச் சென்று சாவகச்சேரி பிரதேச செயலகத்தை அடைந்தனர்.

அங்கு காலை 10.30 மணியளவில் ஜனாதிபதிக்கான மகஜரை பொது அமைப்புகள் ஒன்றியத்தலைவரும், யாழ். அரச அதிபருக்கான மகஜரை மாதர்சங்கத் தலைவி வேலுப்பிள்ளையும், வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநருக்கான மகஜரை வர்த்தக சங்கப் பொருளாளர் சுயந்தனும், சாவகச்சேரி பிரதேச செயலருக்கான மகஜரை சற்குணமும், சாவகச்சேரி பிரதேச செயலர் எஸ். ஸ்ரீனிவாசனிடம் கையளித்தனர்.

மேற்படி மகஜர்களில் குறிப்பிடப்படுவதாவது- சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள்கட்டுமானப்பணிகளை மேற்கொள்வதற்கு விரைவாகப் பொதுக்கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படவேண்டும். மீள்குடியமர்ந்தமக்களுக்கு ரூ 25 ஆயிரம் கொடுப்பனவை வழங்கி நிவாரணங்களை நிறுத்துகின்றது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி நகரிலும் நேற்று மாபெரும் கண்டனப் பேரணி!



(கிளிநொச்சி)

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கம் காட்டிவரும் இழுத்தடிப்புக்களைக் கண்டித்து நேற்று கிளிநொச்சியில் மக்கள் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கை மீள ஏற்படுத்தப்படவேண்டும். விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகசபையை கையளிக்க வேண்டும். படையினரால் பொதுமக்கள் மற்றும் போராளிகள் படுகொலை செய்யப்படுவது உடனடியாக நிறுத்தப்படவேண்டும். பொதுக் கட்டமைப்பு ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தப் பேரணி (12 ஆம் பக்கம் பார்க்க)

# தென்னாபிரிக்க அரசியல் தலைவர்களுடன் புலிகளின் உயர்மட்டக்குழு சந்தித்து பேச்சு!



(பிரிட்டோரியா)

ஐரோப்பிய, ஆபிரிக்க நாடுகளுக்கான அரசியல் விவகாரச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருக்கும் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான விடுதலைப் புலிகளின் உயர் மட்டக்குழுவினர் - தென்னாபிரிக்க துணை ஜனாதிபதி ஜேக்கப் சூமா மற்றும் நோபல் பரிசாளரான பேராயர் டெஸ்டீன் டுட்டு உட்பட முக்கிய பிரமுகர்களைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினர்.

விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான அரசியல் விவகாரக் குழுவினர் நேற்றுமுன்தினம் தென்னாபிரிக்க துணை ஜனாதிபதி ஜேக்கப் சூமாவைச் சந்தித்துப் பேசினர்.

இந்தச் சந்திப்பின் தொடக்கத்திலேயே சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தென்னாபிரிக்க மக்கள் சார்பில் துணை ஜனாதிபதி தனது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டார்.

தற்போதைய நிலைமை குறித்து அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இந்தச் சந்திப்பில் கருத்து வெளியிடுகையில் - (12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்த் தேசியத்தைப் புலிகள்

## விடுதலைப் புலிகளிடம் நீர்மூழ்கியா?

# தமிழ்த் தேசியத்தைப் புலிகள் இப்போதே அடைந்துவிட்டனர்!

## தெகல்கா இணையத்தளம் கருத்து

விடுதலைப் புலிகள் தமிழ்த் தேசியத்தை அடைந்துவிட்டதாக இந்திய அரசு சார்பு இணையத் தளமான தெகல்கா டொட் கொம் தெரிவித்துள்ளது.

தெகல்கா நிருபர் வி.கே.சஷிகுமார் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் மூன்று வாரங்கள் தங்கியிருந்து எழுதியுள்ள கட்டுரையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் மற்றும் மகளிர் அரசியற் துறையைச் சேர்ந்த தமிழ்கவி ஆகியோருடனான செவ்விகளையும் தெகல்கா டொட்கொம் வெளியிட்டுள்ளது.

இந்திய சார்பு நிலையுடைய பத்திரிகைகள் - விடுதலைப் புலிகளுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டுள்ள காலப் பகுதியில், விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக ஒரு இந்திய சார்பு நிலை ஊடகம் முதன் முறையாக கட்டுரை வெளியிட்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

தெகல்கா நிருபர் சஷிகுமாரின் செய்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது -

புலிகள் ஏற்கனவே ஒரு தேசியத்தை

(12 ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகளிடம் நீர்மூழ்கியா? இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை!

## என்கிறார் இராணுவப் பேச்சாளர்

விடுதலைப் புலிகளிடம் நீர் மூழ்கிக் கப்பல் உள்ளதாக வெளியான செய்திகளை பாதுகாப்புத் தரப்பு இது வரை உறுதிப்படுத்தவில்லை எனினும், நாட்டின் பாதுகாப்புக்கு விடுக்கப்படும் எந்தவொரு அச்சுறுத்தலை முறியடிக்கவும் படையினர் தயாராகவே உள்ளனர் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரத்னாயக்க தெரிவித்தார்.

வடபகுதி கடற்பிரதேசத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் நீர் மூழ்கிக் கப்பல் போன்றதொரு பொருளின் நடமாட்டத்தை படையினர் அவதானித்தமை மற்றும் கடற்படை தளங்களை விடுதலைப்புலிகள் தாக்கவுள்ளதாக புலனாய்வுத் தகவல்களை மேற்கோள் காட்டி வெளியான செய்தி தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

விடுதலைப்புலிகள் கடற்படை முகாம்களைத் தாக்குவது குறித்த உறுதியான எவ்வித தகவலும் இதுவரை எமக்குக் கிடைக்கவில்லை. ஆனா

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அமெரிக்க தளபதியை கதிர்காமர் சந்திப்பு!


(கொழும்பு)

அமெரிக்கக் கடற்படையின் பசுபிக் பிராந்தியக் கட்டளைத் தளபதியாக அண்மையில் பொறுப்பேற்றுக்கொண்ட அட்மிரல் ஜேபலோன், வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரை நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தச் சந்திப்பின்போது சுனாமி புனர்நிர்மாணம், சுனாமி தொடர்பாக இராணுவம் ஏற்படுத்தவுள்ள பொதுக் கட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்தும் அமெரிக்கத் தளபதிக்கு லக்ஸ்மன் கதிர்காமர் விளக்கிக் கூறினார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

**விண்ணாணம் விநாசியர்**



எத்தனைதரம் கட்டமைப்பை மாற்றியும் என்னத்தைத்தான் கிழிச்சவை...!

# புலனாய்வுச் சேவை கட்டமைப்பை அரசாங்கம் மீண்டும் மாற்றுகிறது!

(கொழும்பு)

இலங்கை புலனாய்வுச் சேவையில் மீண்டும் மாற்றம் ஏற்படுத்தப்பட்டு - புதிய பணிப்பாளர் ஒருவரை இந்த மாத இறுதியில் நியமிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருப்பதாகத் தெரியவருகிறது.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது -

புலனாய்வுச் சேவையில் பலம் மிக்க பணிப்பாளராக இருந்த ஜே.வி.டி. சுமணசேகர இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவருக்குப் பதிலாக புதிய பணிப்பாளர் நியமிக்கப்படும்வரை இந்த முக்கிய திணைக்களம் தலைமையற்ற நிலையிலேயே இயங்கவேண்டியநிலை ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று வருடங்களில் மாத்திரம் மூன்று முறை இலங்கை புலனாய்வுச் சேவையின் உயர் பதவியில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்ததும் இந்த மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. பின்னர் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவால் இந்த உயர் பதவியில் மாற்றம் கொண்டுவரப்பட்டது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்ற பின்னர் மற்றும் ஒரு மாற்றம் இடம்பெற்றது.

விடுதலைப் புலிகள் ஒரு அமைப்பென்ற நிலையில் புலனாய்வுத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பருத்தித்துறைப் பொலிஸாருக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் புகார்

(பருத்தித்துறை)

புலோலியை சேர்ந்த மூன்று இளைஞர்களை பருத்தித்துறை பொலிஸார் கைது செய்தமையை எதிர்த்து, யாழ். மனித உரிமைகள் அணைக் குழுவின் அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இகடந்த சில தினங்களுக்கு முன்னர் புலோலி தென்மேற்கு பகுதியில் சொரூபம் காணாமல் போயிருந்தது. இந்தச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் சொரூபத்தை வழிபட்டு வந்த குடும்பத்தினர் முறைப்பாடு செய்தனர்.

இதன் பின்னர் புலோலி மேற்கைச் சேர்ந்த மூன்று இளைஞர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸார் கைது செய்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும், இவர்கள் கைது செய்யப்பட்டமை அடிப்படை உரிமை மீறப்பட்டதாகவும் எதிர்த்து நூற்றுக் கணக்கான மக்கள் கையெழுத்திட்டு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண அலுவலகத்தில் முறைப்பாட்டுக் கடிதத்தை கையளித்தனர்..

# கலந்துரையாடல்

யாழ்ப்பணம், முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் புதிதாக நியமனம் பெற்று கடமையாற்றும் கடல்வள ஆசிரியர்களுக்கான ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை விண்ணப்பம் தொடர்பான கலந்துரையாடல் எதிர் வரும் வெள்ளிக்கிழமை [illegible] அளவில் நாவலர் வீதியில் அமைந்துள்ள பிறைற்றன் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் அனைத்து ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு நீர் உயிர்வள ஆசிரியர் சங்கத்தின் தலைவர் கே. பரமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

*கரவெட்டிப் பிரதேச*

# கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி

(கரவெட்டி)

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் அனுசரணையுடன், வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலக (கரவெட்டி) பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள் எதிர்வரும் 17ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

கரவெட்டி பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் - பிரதமவிருந்தினராக யாழ் அரசஅதிபர் கே.கணேஸ் கலந்துகொள்ளவுள்ளார்.

யாழ்மாவட்ட விளையாட்டுக்கழக அதிகாரி றொகான் இராசசிங்கம் சிறப்பு விருந்தினராகவும், வடமராட்சி அரசியற் துறைப்பொறுப்பாளர் ந. இன்பன் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்த விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு விளையாட்டு வீர வீராங்கனைகள் மற்றும் பொதுமக்களுக்கு வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலகம் அழைப்பு விடுத்துள்ளது.

# குடாநாட்டு வைத்திய அதிகாரிகளுக்கு மீள் நியமனம் வழங்க அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்டத்தில் சுகாதார சேவைகளின் கீழ் பணிபுரியும் 65 வயதிற்கு மேற்பட்ட வைத்திய அதிகாரிகளுக்கு மீள் நியமனம் வழங்குவதற்கு அனுமதி கிடைத்துள்ளதாக சுகாதார சேவைகள் மாகாணப்பிரதிப்பணிப்பாளர் கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

65 வயதிற்கு மேற்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கு மீள் நியமனம் வழங்க முடியாது என அண்மையில் அரசாங்கம் தெரிவித்துள்ளது. இதனால் யாழ் மாவட்ட சுகாதார சேவையில் பணிபுரியும் வைத்திய அதிகாரிகளுக்கு பற்றாக்குறை ஏற்படுமாயின் சுமார் 10 வைத்தியசாலைகள் மூடப்பட வேண்டியநிலை ஏற்படும். இந்த விடயம் தொடர்பாக சுகாதார அமைச்சுடன் தொடர்பு கொண்டு பேசிய போது இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதைவிட அண்மைக்காலமாக யாழ் குடாநாட்டில் காசநோய் அதிகரித்துள்ளதாகவும் இதற்கு காசநோய்க்குட்பட்ட நோயாளர்கள் பூரணமாக சிகிச்சை பெறாமையாயே காரணமெனவும் கண்டறியப்படுகிறது.

இதற்காக பண்ணையில் காசநோய் மருத்துவமனை ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

# இன்றைய கிரிக்கெட்

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் நடாத்தப்படும் நான்கு முனை 30 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய போட்டியில் இன்று யாழ் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் கிரிக்கெட் போட்டியில் காலை 8.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக அணி எதிர் யங் ஸ்ரார் விளையாட்டுக்கழகமும், மாலை 1.00 மணிக்கு சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் யாழ். பற்றீசியன் விளையாட்டுக் கழகமும் மோத உள்ளன. (58)


## தமிழீழ தேசிய தொலைக்காட்சிக்கான ஆளணி வேண்டுகைகள்

தமிழீழ தேசிய தொலைக்காட்சி சேவையில் பணிபுரிவதற்கான வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

- செய்தி வாசிப்பாளர்
- நிகழ்ச்சி அறிவிப்பாளர்
- நிகழ்ச்சித் தயாரிப்பாளர்
- நிகழ்ச்சித் தொகுப்பாளர்

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்

தகைமைகளுக்கு அமைய கொடுப்பனவு வழங்கப்படும்

விண்ணப்பங்களை :
விளம்பர இல :37
'நமது ஈழநாடு'
267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு 15.04.2005 இற்கு முன் அனுப்பி வைக்கவும்.

நிர்வாகி, தமிழீழ தேசிய தொலைக்காட்சி.

## மனோகரா திரையரங்கு யாழ்ப்பாணம்

பார்த்தீபன், காவேரி, மாஸ்ரர் அஸ்வின் மற்றும் பலர் நடித்த கண்ணாடிப் பூக்கள் கா.நே:10.30. 2.30 (பு.நே)

தனுஷ், ஸ்ரீதேவி, கருணாஸ் நடித்த தேவதையைக் கண்டேன் கா.நே: 6.30. 9.30 (பு.நே)

சித்திரைப் புத்தாண்டு வெளியீடாக இளைய தளபதி விஜய், போய்ஸ் புகழ் ஹரிணி, வடிவேல் நடித்த

சச்சின்



ரிக்கெட் முற்பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

## ராஜா யாழ்ப்பாணம்

இன்று மட்டும்
விஜய், திரிசா, பிரகாஸ்ராஜ் நடிக்கும்
கில்லி
நாளை முதல் புதுவருட வெளியீடு
இந்திய, இலங்கை ஒரேதின வெளியீடு
கமலஹாசன், மனிசா கொய்ராலா நடித்த
மும்பை Xபிரஸ்
ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்
(சி-3980) பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

## நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

புதுவருட பிரமாண்டமான வெளியீடு
14.04.2005 தினசரி 5 காட்சிகள்
பு.நே. 11.00, 3.00,7.00
இரவு விசேட காட்சியாக 10.00, இரவு 1.30

சுப்பஸ்ரார்
ரஜினிகாந், நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல், நாசர் நடிப்பில்
சிவாஜி புரொடெக்ஷனின் 50 வது படம்

சந்திரமுகி



இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

(C/3979)

## UNIT

இந்தியாவில் கணனி பொறியியல் துறைப்பட்டம் பெற்றவர்களும், இந்தியாவில் இரண்டு சதாப்த காலமாக கணனியில் பல்லேறு துறைகளில் பணிபுரிந்து அனுபவம் பெற்று பெயரெடுத்தவர்களாகிய நாங்கள் தாயக மண்ணில் அதியுயர் தொழில் நுட்பத்தை வழங்கிவருகிறோம். கணனித் துறையில் எமது அனுபவம் மற்றும் தனித்தன்மையும் கொண்டு முதல் படியாக சகல கணனி உதிரிப்பாகங்களையும் உற்பத்தியாளர்களிடமே நேரடியாக இறக்குமதி செய்து குறைந்த விலைக்கேயுரிய சேவையுடன் இலங்கையில் எங்கும் இல்லாதவாறு 3 வருட் உத்தரவாதத்துடன் வழங்குகின்றோம்.

கொழும்பு விலையில் 3 வருட முழு உத்தரவாதம்

எமது சேவைகள் பல அவற்றில் சில :

விற்பனை

- உலகத்தரம் வாய்ந்த பிரத்தியேக உதிரிப்பாகங்களை தெரிவுசெய்து இணைத்து முழுக்கணனியாகவும் மற்றும் உதிரிகளாகவும் வழங்குதல்.
- கணனித் தயாரிப்பில் முன்னணி நிறுவனங்களான compaq, DELL, IBM மற்றும் HPநிறுவனங்களில் தயாரிப்புக்களை மிகமிகக் குறைந்த விலையில் தரம் மாறாமல் வழங்குதல்.
- உலகத்தரம் மற்றும் முன்னணி தயாரிப்பு நிறுவனங்களான Perx & Asrock தயாரிப்புக்களின் ஏக விநியோகம்.
- வலைப்பின்னலமைப்பில் முன்னணி நிறுவனமான Cisco தயாரிப்புக்கள் மற்றும் சேவைகளை மிகமிகக் குறைந்த விலையில் வழங்குதல்.

விலை குறைவு என்பதற்காக தரம் குறைந்தவையல்ல! தரம் மிகமிக உயர்ந்தது

New Year Offer
நாங்கள் வழங்கும் ஒவ்வொரு கணனியுடனும்

எல்லாம் Hybrid Boost, Hypher Thread, Dual Monitor வசதிகளுடன்

Lnkjet Printer/ 2400 DPI Scanner/ Computer Table/ 600VA UPS
மற்றும் Screen Filter, Mouse Pad & Dust Cover Totally Free

- புதிய Multimedia Pentium IV கணனிகள்
- மூன்று வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சேவைகள்

An Indian Engineer's Centre

We are entirely different from others

நிபந்தனைக்குட்பட்டது. இச்சலுகை சிலதினங்கள் மட்டுமே.

Universal Network of Information Technology
347, K.K.S. Road, Manohara Theatre Junction,
Jaffna, Sri Lanka.
(c/4051)

## ஓர் அரிய சந்தர்ப்பம்!

றாகம புனர்வாழ்வு வைத்தியசாலையில் பயிற்சி பெற்று யாழ் ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தில் செயற்கை அவயவம் / சார்புறுப்பு பொருத்தும் தொழில்நுட்பவியலாளராக பணிபுரியும் வாய்ப்பு!

*இதற்கு முன்னோடியாக*

யாழ் ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தில் தொழில்நுட்ப பயிலுநரை தெரிவு செய்யும் நேர்முகப் பரீட்சை.

இடம் :- யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம்.
இல. 05, பழையபூங்கா வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

காலம் :- 15.04.2005 வெள்ளி, 18.04.2005 திங்கள் } காலை 9.30 இலிருந்து மதியம் 12.30 வரை

வயதெல்லை :- 30 சித்திரை 2005 இல் 18 - 30 வரை.

*கல்வித் தகைமைகள் -*

1) க.பொ.த (சாதாரணதரம்) இரண்டு தடவைகளுக்கு குறையாது ஆறு பாடங்களில் சித்தி, அதில் விஞ்ஞானம், கணிதம், அங்கிலம், தமிழ் அல்லது சிங்களத்தில் திறமைச் சித்திகள்.

2) க.பொ.த (உயர்தரம்) விஞ்ஞான பிரிவில் மூன்று பாடங்கள் ஒரே தடவையில் சித்தி, அதில் பௌதிகம் திறமைச்சித்தி.

குறிப்பு - நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பதாரிகள் தங்கள் சுயவிபரங்கள் மற்றும் கல்விச்சான்றிதழ்களின் மூலப்பிரதி, மற்றும் போட்டோ பிரதிகளுடன் மேற்குறிப்பிட்ட திகதிகளில் நேரடியாக சமுகம் தரவும்.

(1121) - தலைவர் -

# ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள் முடிவுற்றன!

## அறிக்கை தயாரிப்பு தீவிரம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகள் மீது அண்மைக் காலமாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக விசாரணை நடத்தி, அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி சந்திரிகாவால் நியமிக்கப்பட்ட விசேட ஆணைக் குழுவின் விசாரணைகள் முடிவடைந்துள்ளதென அந்த ஆணைக் குழுவின் செயலாளர் ஏ.ஆர்.எம் கலீல் தெரிவித்தார்.

ஆணைக்குழு விசாரணைகள் தொடர்பான இறுதி அறிக்கை தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாகவும், இதன் அறிக்கை அடுத்த மாதம் மூன்றாம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த பெப்ரவரி முதலாம் திகதிக்கும், மார்ச் இரண்டாம் திகதிக்கும் இடையில் விடுதலைப்புலிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்களின் பின்னணி குறித்து ஆராய்வதற்காக ஜனாதிபதி சந்திரிகாவால் இந்த விசேட ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி கே.விஸ்வநாதன் ஆணைக்குழுவின் தலைவராகவும், அம்பாறை மேல் நீதிமன்ற நீதிபதி டபிள்யூ.ரி.எம்.பீ.பி வேராவெவ உறுப்பினராகவும், அம்பாறை மேல் நீதிமன்ற பதிவாளர் ஆர்.எம்.கலீல் செயலாளராகவும் நியமிக்கப்பட்டிருந்தனர்.

கடந்த மார்ச் 28 ஆம் திகதி தொடக்கம் - ஏப்ரல் முதலாம் திகதி வரை அம்பாறை நீதிமன்றக் கட்டடத் தொகுதியிலும், கடந்த 4 ஆம்திகதி முதல், 8 ஆம் தகதி வரை மட்டக்களப்பு நீதிமன்ற கட்டடத் தொகுதியிலும் இந்த விசாரணைகள் இடம்பெற்றன.

இதில் இராணுவப் பொலிஸ் விசேட அதிரடிப்படை மற்றும் கண்காணிப்புக் குழ அதிகாரிகளென தலா 13 பேர், இரண்டு மாவட்டங்களிலும் சாட்சியமளித்த போதிலும், விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் எவரும் சாட்சியமளிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதியின் அனுமதியின்றி அமைச்சர்கள் வெளிநாடு செல்வதற்குத் தடை விதிப்பு!



(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் முன்அனுமதி பெறப்படாமல் - அமைச்சர்களோ, பிரதியமைச்சர்களோ வெளிநாடுகளுக்குச் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது. வெளிநாடு செல்ல விரும்பும் அமைச்சர்களால் - முறையாக விண்ணப்பப்பத்திரம் பூர்த்தி செய்யப்பட்டு, ஜனாதிபதியின் அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அமைச்சர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

ஏற்கனவே அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் வெளிநாடு செல்வதற்கான நடைமுறைகள் இருந்தும், அது பின்பற்றப்படாததாலேயே இந்தப் புதிய தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

அமைச்சர்கள் தீடீர் என்று வெளிநாடு செல்வதால், பிரதியமைச்சர்களை பதில்கடமை புரிவதற்கு நியமிப்பதில் சிக்கல்கள் உள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அத்துடன், பிரதியமைச்சர்கள் பலர் இது சம்பந்தமாகப் பல முறைப்பாடுகளை கட்சியின் பொதுச் செயலாளர் நிமால் சிறிபால டி சில்வாவுக்கு செய்துள்ளனர்.

இதனாலேயே இந்தப் புதிய நடைமுறை அமுலுக்கு வரவுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

விண்ணப்பப் பத்திரத்தின் மாதிரியை ஜனாதிபதி அமைச்சரவைக் கூட்டத்தில் காண்பித்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# இந்தோனேஷிய பூமியதிர்ச்சி; இலங்கையில் மண் சரிவு!

## எச்சரிக்கிறார் பேராசிரியர்

(கொழும்பு)

இந்தோனேசியாவின் சுமாத்ராவில் கடந்த டிசம்பர் மாதம் ஏற்பட்ட பூமியதிர்ச்சி மற்றும் அதற்குப் பின்னர் ஏற்பட்ட அதிர்வுகள் ஆகியவற்றால் இலங்கையின் மத்திய மலைநாட்டில் பாதிப்பு ஏற்படும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாகக் கண்டி, கோகாலை, ரத்தினபுரி, மாத்தளை ஆகிய மாவட்டங்களில் மண்சரிவுகள் ஏற்படும் அபாயம் இருப்பதாகப் பேராதனை பல்கலைக்கழகப் பேராசிரியர் சி.பி.திஸாநாயக்க தெரவித்துள்ளார். இதன் காரணமாகக் கடும்மழை தொடர்ந்து மூன்று தினங்களுக்கு நிலவுமானால் மக்கள் முன்னெச்சரிக் கையாக நடந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (01)

## அரசியல் நெருக்கடி குறித்து

# நாட்டு மக்களுக்கு விளக்க கருத்தரங்குகளுக்கு ஏற்பாடு!

(கொழும்பு)

தற்போதைய அரசியல் நெருக்கடி குறித்து நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்தும் நோக்கில், இந்த மாதம் 23, 24 ஆம் திகதிகளில் நாடளாவிய ரீதியில் கருத்தரங்குகளை நடத்துவதற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி தீர்மானித்துள்ளது.

அரசாங்கத்தால் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத் திட்டங்கள், நாட்டில் தற்போது நிலவிவரும் அரசியல் நெருக்கடி, உத்தேசிக்கப்பட்ட ஒருங்கிணைந்த கட்டமைப்பு ஆகியவை தொடர்பாக நாட்டுமக்களுக்குத் தெளிவுபடுத்தும் நோக்கில் இந்தக் கருத்தரங்குகளை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளதாகச் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இரு தினங்களும் 18 மாவட்டங்களில் இந்தக் கருத்தரங்குகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

சித்திரைப் புத்தாண்டைக் களிப்பதற்காகப் பிரிட்டன் சென்றுள்ள ஜனாதிபதி - நாடு திரும்பியதும் கட்சியின் மாவட்ட இணைப்பாளர்களுக்கு இதுகுறித்து அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (தே)

# அம்பாறையில் இளைஞர் கைது!

(அம்பாறை)

அம்பாறை - கண்டி வீதி பதுளைச்சந்தியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை, 23 வயது இளைஞரொருவர் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். பழுகாமம் வீரச்சேனையைச் சேர்ந்த ஜெயசேகர பண்டா புஜந்தன் என்பவரே கைதுசெய்யப்பட்டவராவார்.

சோதனைச் சாவடியில் இவரைச் சோதனையிட்டபோது, துப்பாக்கியுடன் உபயோகிக்கும் கத்தி ஒன்றும், இரண்டு தேசிய அடையாள அட்டைகளும் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்தே இவர் கைது செய்யப்பட்டார் எனத் தெரிய வருகிறது.

# பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு கடன் வழங்க அரச வங்கி இணக்கம்

(கொழும்பு)

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தைத் தனியார் மயப்படுத்தாது, இலாபநோக்கோடு செயற்படுத்துவதற்கு கடன்களை வழங்கு அரச வங்கிகள் விருப்பம் தெரிவித்துள்ளன என்று கூட்டுத்தாபனத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தைத் தனியார் மயப்படுத்துவதால், திறைசேரிக்குப் பணம் பெறுவதற்குச் சென்றால் அதன் மூலம் அரசு கம்பனிகளிடம் பெற்றுக் கொள்ளும் தொகையைத் தங்கள் வங்கிகளில் வழங்க முடியும் என்று அரசு வங்கிகள் தெரிவித்துள்ளன.

வங்கிகளால் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குத் தரப்படும் கடன் தொகைகளுக்காகப் பெற்றோலியக் கூட்டுத்தாபனப்பங்குகளை அரச வங்கிகளுக்கு அடகாக வைக்கலாம் என்றும், எரிபொருள் விற்பனையில் கிடைக்கும் நிதியிலிருந்து இந்த அடகை மீட்கலாம் என்றும் மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி ஆலோசனை தெரிவித்துள்ளது.

இந்த முறை பின்பற்றப்படுமானால், கூட்டுத்தாபனத்தைத் தனியார் மயப்படுத்தத் தேவையில்லை என்று அந்த உயர் அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (தே)

# பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க ஏற்பாடு!

## அமைச்சரவைப் பத்திரம் தாக்கல்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் கடந்த எட்டு வருடங்களாக ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றி வரும் சகல ஆங்கில ஆசியர்களையும் நிரந்தர ஆசிரிய சேவையில் உள்வாங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஜனவரி மாதம் தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் நியமனங்கள் வழங்கப்பட இருப்பதாக மாகாணக் கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அமைச்சர் பேரியல் அஷ்ரப் அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்து இது தொடர்பாக வேண்டுகோள் விடுத்திருந்தார். அதைத்தொடர்ந்து கல்வி அமைச்சின் செயலாளர் தாரா டி மெல் இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தைத் தாக்கல் செய்திருக்கிறார்.

இதன் மூலம் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் 970 ஆசிரியர்கள் பயன்பெறவுள்ளனர்.

# 12 அகதிகள் தாயகம் திரும்பினர்

(புதுடெல்லி)

தமிழ் நாட்டிலிருந்து மேலும் 12 ஈழத்தமிழ் அகதிகள் நேற்றுமுன்தினம் காலை மீன்பிடி வள்ளமொன்றில் மன்னார் வழியாகத் தாயகம் திரும்பினர்.

மன்னார் தீவிலுள்ள மணற்திட்டியொன்றில் இறக்கிவிடப்பட்ட இவர்கள்- கடற்படையினரால் மீட்கப்பட்டு, தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்களை நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தியபோது, சிவில் அதிகாரிகள் ஊடாகச் சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

# மின்சாரசபை மறுசீரமைப்பதற்கு தொழிற்சங்கங்கள் ஆதரவு!

(கொழும்பு)

அரசின் அனாவசிய தலையீடுகளில் இருந்து, இலங்கை மின்சார சபையை மீட்டெடுத்து, இலங்கை மின்சார சபையை ஒரு நிறுவனமாக நடத்திச் செல்வதற்கான முழுமையான மறுசீரமைப்பு ஏற்படுத்தப்படுமானால், அதற்கு எந்தவிதத்திலும் எதிர்ப்பு இல்லை என இலங்கை மின்சாரசபையின் ஒருங்கிணைந்த தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

மின்சார சபையை மறுசீரமைப்பது தொடர்பான நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக, உண்டாகியுள்ள சிக்கல்களைக் கலந்துரையாடுவதன்மூலம் தீர்த்துக் கொள்வதற்கு ஒருங்கிணைந்த தொழிற்சங்கக் கூட்டமைப்புக் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டுள்ளது.

மின்சாரசபை தொடர்பாக அரச மற்றும் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் அடங்கிய விசேட மாநாடு- கடந்த 6 ஆம்ட திகதி நிதியமைச்சில் நடைபெற்றபோது, இலங்கை மின்சார சபையில் தொழிற்சங்கங்களின் தலைவர்கள் பத்துப்பேர் கலந்து கொண்டனர். அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தி மின்சக்தி எரிபொருள் அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த, நிதியமைச்சின் செயலாளர் பி.டி.ஜயசுந்தர, மின்சக்தி அமைச்சின் செயலாளர் வீரகன்னதி, ஜனாதிபதியின் ஆலோசகர் மனோ தித்தவெல ஆகியோர் கலந்து கொண்டனர்.

தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும், அரச பிரதிநிதிகளுக்குமிடையே அடுத்த கலந்துரையாடல் மே மாதம் 18 ஆம் திகதி நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

# போராளி வீரச்சாவு

(மட்டக்களப்பு)

கடந்த 04.02.2005 அன்று மட்டக்களப்பு - கிரானில் இனந் தெரியாதோரால் சுடப்பட்ட விடுதலைப் புலிகளின் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரவேங்கை நிவேசன் என அழைக்கப்படும் மட்டக்களப்பு - புலிபாய்ந்த கல் - கிரானைச் சேர்ந்த சின்னத்துரை தேவகாந்தன் என்ற போராளியே வீரச்சாவடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# பிரதிப் பொலிஸ்மா அதிபர்களாக நால்வர் புதிதாக நியமனம்!

(கொழும்பு)

நான்கு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், பிரதிப் பொலிஸ்மா அதிபர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜயந்த விக்கிரமரட்ண, சிறிசேன ஹேரத், குமாரசிறிஹமகே, விக்டர் பெரேரா ஆகியோரே பிரதிப் பொலிஸ்மா அதிபர்களாக நியமனம் பெற்றவர்களாவர்.

இவ்வாறு இவர்கள் நியனம் பெற்றபோதும், செனவிரட்ணபண்டா, மகிந்த பாலசூரியா ஆகியோருக்கெதிரான குற்றச்சாட்டுக்களின் விசாரணைகள் முடிவடையும்வரை, அவர்கள் பதவியேற்பதைத் தேசிய பொலிஸ் ஆணைக்குழு இடைநிறுத்தியுள்ளது.

# லண்டனில் உள்ள தமிழர்கள்மீது பொலிஸார் தீவிர கண்காணிப்பு!

(லண்டன்)

லண்டனில் வசிக்கும் ஈழத்தமிழர்கள் மத்தியில் இடம்பெற்றுவரும் குற்றச் செயல்கள் அதிகரித்து வருவதை அடுத்து, பொலிஸார் தீவிர நடவடிக் கைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.


கடந்த ஒன்பது மாதங்களில் மட்டும் இங்கிலாந்து பொலிஸார் 68 தமிழ் இளைஞர்களை கைது செய்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

லண்டன் பொலிஸாரால் 14 இடங்களில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது இவர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து கடன் அட்டைகள் மற்றும் அதனை மாற்றியமைக்கும் இயந்தரங்கள் வாகனங்கள் இரண்டும் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - இவர்களில் சிலரால் 22 மில்லியன் பவுண் மோசடி செய்யப்பட்டுள்ளதாகவும் அறவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடை"யில் லண்டன் பொலிஸாரால் சுமார் 500 தமிழ் இளைஞர்கள் பற்றிய தகவல்கள் திரட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (01)

# பாகிஸ்தான் 3 விக்கெட்டுக்களால் இந்திய அணியைத் தோற்கடித்தது!



இந்திய பாகிஸ்தான் அணிகளிடையே அகமதாபாத்தில் நேற்று நடைபெற்ற நான்காவது ஒருநாள் போட்டியில் பாகிஸ்தான் 3 விக்கெட்டுக்களால் இந்திய அணியைத் தோற்கடித்தது.

இந்த 4ஆவது ஒருநாள் போட்டி அகமதாபாத்தில் நேற்றுக்காலை 9.30 மணிக்கு ஆரம்பமாக இருந்த போதும், மைதானத்தில் ஈரப்பதம் இருந்ததால் போட்டி தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டது. ஆடுகளத்தைப் பார் வையிட்ட நடுவர்கள் 10 மணிக்கு போட்டி தொடங்கும் என்று முதலில் அறிவித்தனர். ஆனால் அந்த நேரத்திலும் தொடங்கமுடியவில்லை. 2ஆவது முறையாகப் பார்வையிட்ட போது 10.30 மணிக்கு தொடங்கும் என்றனர்.

எனினும் ஒரு மணிநேர தாமதத்திற்குப் பின்பு போட்டி காலை 11 மணிக்குத் தொடங்கியது.

இந்திய அணியின் கப்டன் கங்கூலி நாணயச் சுழற்சியில் வென்று தனது அணி முதலில் துடுப்பெடுத்தாடுமென அறிவித்தார். தொடக்க வீரர்களாக டெண்டுல்கரும், ஷேவாக்கும் களமிறங்கினார்கள்.


இந்திய அணியின் தொடக்கம் மிகவும் சிறப்பாக இருந்தது. ஷேவாக்கும், டெண்டுல்கரும் தொடக்கத்தில் இருந்தே அபாரமாக விளையாடினார்கள். இதனால் 7.1ஆவது ஓவரில் இந்திய அணி 50 ஓட்டங்களைத் தொட்டது.

நன்றாக ஆடிக்கொண்டிருந்த ஷேவாக் எதிர்பாராத விதமாக ரன் அவுட்டானார். யுனுஸ்கான் அவரை ஆட்டமிழக்கச் செய்தார். அவர் 29 ஓட்டங்களை எடுத்தார். அப்போது இந்திய அணியின் ஸ்கோர் 10.1 ஓவரில் 65 ஓட்டங்களாக இருந்தது.

பின்னர் 2ஆவது விக்கெட்டுக்கு டெண்டுல்கருடன் டோனி ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடியும் சிறப்பாக ஆடியது. குறிப்பாக டெண்டுல்கர் அதிரடி ஆட்டத்தில் ஈடுபட்டார். அவர் 62 பந்துகளில் 5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 50 ஓட்டங்களைத் தொட்டார்.


32ஆவது ஓவரில் ஸ்கோர் 194ஆக இருந்தபோது டோனி ஆட்டமிழந்தார். அவர் 64 பந்துகளில் 4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 47 ஓட்டங்களை எடுத்தார். டெண்டுல்கர்–டோனி ஜோடி 2ஆவது விக்கெட்டுக்கு 129 ஓட்டங்களை எடுத்தது. அடுத்து கப்டன் கங்கூலி களமிறங்கினார்.

மறுமுனையில் இருந்த டெண்டுல்கர் அபாரமாக ஆடி சதமடித்தார். 105 பந்துகளில் 10 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் 100 ஓட்டங்களைத் தொட்டார். இது ஒருநாள் போட்டிகளில் அவர் பெற்ற 38ஆவது சதமாகும். 33.2ஆவது ஓவரில் இந்தியா 200 ஓட்டங்களைத் தொட்டது. தொடர்ந்து மோசமாக ஆடிவந்த கங்கூலி நேற்



றைய ஆட்டத்திலும் சோபிக்கத் தவறினார். 18 ஓட்டங்களில் அவர் ஆட்டமிழந்தார். அப்போது ஸ்கோர் 242ஆக இருந்தது.

அடுத்த சிறிது நேரத்தில் அபாரமாக ஆடிக்கொண்டிருந்த டெண்டுல்கர் 123 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அவர் 130 பந்துகளில் 12 பவுண்டரி



கள், 2 சிக்ஸர்களுடன் இந்த ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்துவந்த வீரர்களில் யுவராஜ் சிங் மட்டும் அதிரடியாக விளையாடினார். விக்கெட்டுக்களும் மளமள வென்று சரிந்தன. ஆட்டத்தின் கடைசி ஓவரில் இந்திய அணிக்கு 19 ஓட்டங்கள் கிடைத்தன.

இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 48 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 315 ஓட்டங்களைக் குவித்தது. யுவராஜ்சிங் 26 பந்துகளில் 5 பவுண்டரிகளுடன் 35 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் சொகைப் மலிக் 3, மொகமட் சமி ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பின்னர் 316 என்ற வெற்றி இலக்கை நோக்கி பாகிஸ்தான் துடுப்பெடுத்தாடியது. சல்மான் பட்டும், அப்ரிடியும் தொடக்க வீரர்களாகக் களமிறங்கினர். தொடக்கம் முதலே அவர்கள் அதிரடி ஆட்டத்தில் ஈடுபட்டனர். அப்ரிடி 23 பந்துகளில் 40 ஓட்டங்களை எடுத்தார். சல்மான் பட் 48 ஓட்டங்களைப் பெற்றார்.

ஆரம்பம் முதலே பாகிஸ்தான் வீரர்கள் நிதானமாகவும், நேர்த்தியாகவும் ஆடினர். ஆரம்ப ஆட்டக்காரர்கள் ஆட்டமிழந்த பின்னர் களமிறங்கிய அப்துல் ரசாக் – சொகைப் மலிக் ஜோடியும் ஓட்டங்களைக் குவித்தது. ரசாக் 44 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். மலிக் 65 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். பின்னர் கப்டன் இன்சமாம் ஆட்டமிழக்காமல் 60 ஓட்டங்களை எடுத்து தனது அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றார்.

முடிவில் பாகிஸ்தான் 319 ஓட்டங்களை எடுத்து இந்தியாவை 3 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் தோற்கடித்தது.

பந்துவீச்சில் முரளி கார்த்திக் மற்றும் பாலாஜி, சகீர்கான், டெண்டுல்கர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.


இதனால் 6 போட்டிகளைக் கொண்ட இந்தத் தொடரில் 2–2 என்ற



கணக்கில் இரண்டு அணிகளும் சமனிலை பெற்றுள்ளன. இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாக இன்சமாம்–உல்–ஹக் தெரிவானார்.

## கிரிக்கெட் போட்டி

யாழ்பல்கலைக்கழக விளையாட்டு அவையால் நடத்தப்படும் கிரிக்கெட் போட்டி பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்றுவருகிறது. இன்றையதினம் நடைபெறவுள்ள ஆட்டத்தில் காலை 8.30 மணிக்கு யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து யாழ் பல்கலைக்கழக அணியும் மற்றைய ஆட்டத்தில் பிற்பகல் 1 மணிக்கு சென்ரலைட்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பற்றீசியன் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.



சீனத் தலைநகர் பீஜிங்கில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பீஜிங் மரதன் போட்டியில் முதலிடம் பெற்ற கென்ய வீரர் ஈனாக் மிதேயி.

## எல்லைப்படை மாவீரர் கிண்ணத்துக்கான உதைபந்தாட்ட அரையிறுதிக்கு நான்கு அணிகள் தெரிவு!

(சுன்னாகம்)

எல்லைப்படை மாவீரர் ஞாபகார்த்தமாக சுனாமி தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காக தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ்.மாவட்டப் பிரிவினரின் ஆதரவுடன் வலிகாம உதைபந்தாட்ட லீக் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டி சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. கடந்த மாதம் 16ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்றுவரும் இந்தச் சுற்றுப் போட்டியில் – யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 54 அணிகளும், வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த 3 அணிகளும் பங்கு பற்றின.


அனைத்துச் சுற்றுக்களிலும் வெற்றிபெற்ற 4 அணிகள் அரையிறுதி ஆட்டத்துக்குத் தெரிவாகியுள்ளன. இந்த அணிகளுக்கிடையிலான அரையிறுதியாட்டம், இறுதியாட்டம் மின்னொளியில் நடைபெறவுள்ளது. இதேவேளை 40 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான உதைபந்தாடடப் போட்டியும் இறுதியாட்டம் நடைபெறும் அதே தினத்தில் மின்னொளியில் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தப் போட்டி விஷேட காட்சிப் போட்டியாக அமையும். இந்த ஆட்டத்துக்கு யாழ்.லீக், பருத்தித்துறை லீக், வலிகாமம் லீக், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய லீக்கிலிருந்து இரு அணிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அரையிறுதியாட்டத்துக்கு யாழ்.பல்கலைக்கழக அணி, வட்டக்கச்சி லக்கி ஸ்ரார் விளையாட்டுக்கழகம், நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகம், அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் ஆகிய அணிகள் தெரிவாகியுள்ளன.

இறுதியாட்டம் எதிர்வரும் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது.

விளையாட்டு

## இலங்கை அணிக்கு எதிராக நியூஸிலாந்து 253 ஓட்டங்கள்!



(வெலிங்டன்)

வெலிங்டனில் நடைபெறும் டெஸ்ட் போட்டியில் 211 ஓட்டங்களுக்குள் இலங்கை அணியைச் சுருட்டிய நியூஸிலாந்து அணி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடி 4 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 253 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இரண்டாவது நாளான நேற்று நியூஸிலாந்து அணி 52 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆடத் தொடங்கியது.

ஆட்டம் தொடங்கிய சற்று நேரத்தில் அணியின் ஸ்கோர் 61ஆக இருந்தபோது – ஜேம்ஸ் மார்ஷல் 28 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இவரது விக்கெட்டை எல்.பி.டபிள்யூ முறையில் வாஸ் கைப்பற்றினார்.

அடுத்து ஹேமிஸ் மார்ஷல் களமிறங்கினார். ஆனால் அவர் 6 ஓட்டங்களை மட்டுமே பெற்றநிலையில் ஆட்டமிழந்ததையடுத்து – வின்சென்ற் களமிறங்கினார்.


கமிங் – வின்சென்ற் ஜோடி இலங்கை அணி பந்துவீச்சாளர்களுக்குப் பெரும் நெருக்கடியைக் கொடுத்தது. ஸ்கோர் 153ஐ எட்டிய போதுதான் கமிங்கை மூன்றாவது விக்கெட்டாக இலங்கை அணி பந்து வீச்சாளர்களால் வீழ்த்தமுடிந்தது.

வாஸ் வீசிய பந்தில் எல்.பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்த இவர் 157 பந்துகளில் 5 பவுண்டரிகளுடன் 47 ஓட்டங்களை எடுத்தார்.

இதையடுத்து களமிறங்கிய அஸ்ரில் அடுத்த பந்திலேயே டக் அவுட்டாகி வெளியேறினார்.

இந்தநிலையில் அணித் தலைவர் பிளெமிங் களமிறங்கி நிதானமாக ஆட ஆரம்பித்ததால் – விக்கெட் வீழ்ச்சி தடுக்கப்பட்டது.

இதனால் ஆட்டநேரமுடிவில் நியூஸிலாந்து அணி 253 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. நியூஸிலாந்து அணியின் 4 விக்கெட்டுக்களையும் சமிந்த வாஸ் கைப்பற்றியிருந்தார்.



நியூஸிலாந்து அணி வீரர்களான வின்சென்ற் மற்றும் பிளெமிங் ஆகியோர் ஆட்டமிழக்காமல் இருந்தனர். வின்சென்ற் 188 பந்துகளில் 8 பவுண்டரிகள் 1 சிக்ஸருடன் 79 ஓட்டங்களையும், பிளெமிங் 123 பந்துகளில் 7 பவுண்டரிகளுடன் 60 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

## தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட்: நெருக்கடிக்குள் மேற்கிந்தியத் தீவுகள்!



(ரினிடாட்)

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் – இரண்டாவது இனிங்ஸில் 170 ஓட்டங்களுக்குள் 5 விக்கெட்டுக்களை இழந்த மேற்கிந்தியத் தீவுகள் அணி நெருக்கடியில் உள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற நான்காவதுநாள் ஆட்டத்தில் – 6 விக்கெட் இழப்புக்கு 369 ஓட்டங்கள் என்றநிலையில், பிரின்சும் பௌச்சரும் ஆடத் தொடங்கினர்.

எனினும் ஆட்டம் தொடங்கிய சற்றுநேரத்திலேயே – ஸ்கோர் 374ஐ எட்டியபோது பௌச்சரும், 375ஆக இருந்தபோது பிரின்சும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

பௌச்சர் 92 பந்துகளில் 3 பவுண்டரிகளுடன் 28 ஓட்டங்களையும், பிரின்ஸ் 177 பந்துகளில் 4 பவுண்டரிகளுடன் 45 ஓட்டங்களையும் எடுத்தனர்.

இதன்பின்னர் போயே – என்ரினி ஜோடி இணைந்துகொண்டது. ஆனால் ஸ்கோர் 384ஐ எட்டியபோது – என்ரினி 46 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க கடைசி விக்கெட்டாக – 6 ஓட்டங்களுடன் இருந்த நெல் – ஸ்கோர் 398ஐ எட்டியபோது ஆட்டமிழந்தார்.

போயே 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.


பந்துவீச்சில் கைல் 4, கொலின்ஸ் 2, பிராவோ 2, கிங் 1, ஹின்ட்ஸ் ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இதையடுத்து மேற்கிந்தியத் தீவுகள் அணி இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது. வழக்கம்போலவே ஹின்ட்ஸ் – கைல் ஜோடி களமிறங்கியது.

அணியின் ஸ்கோர் 14ஆக இருந்தபோது – முதல் விக்கெட்டாக கைல் ஒரு ஓட்டத்துடன் பவிலியன் திரும்பினார். இதன்பின்னர் ஹின்ட்சுடன் சர்வான் இணைந்தார்.

இவர்கள் இருவரும் இணைந்து ஆடி ஸ்கோரை 74ஆக உயர்த்திய போது – ஹின்ட்ஸ் 22 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றார். அடுத்து லாரா களமிறங்கியபோதும் – அவர் 4 ஓட்டங்களுடனும், அடுத்துவந்த சந்தர்போல் ஒரு ஓட்டத்துடனும், பகொன் 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து சென்றனர்.

92 ஓட்டங்களுக்குள் 5 விக்கெட்டுக்களை இழந்து தவித்த மேற்கிந்



தியத் தீவுகளுக்கு சர்வான் – பிராவோ ஜோடி ஆறுதலளித்தது. இவர்கள் இருவரும் இணைந்து ஆடி அணியின் ஸ்கோரை 170இற்கு உயர்த்தியநிலையில் – நான்காம்நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

ஆட்டநேரமுடிவில் சர்வான் 190 பந்துகளில் 9 பவுண்டரிகளுடன் 93 ஓட்டங்களையும், பிராவோ 108 பந்துகளில் 30 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**மனிதனுக்கு அவசியமான நிறையுணவில் அடங்க வேண்டிய உணவுக் கூறுகள் பெறப்படும் உணவுகளைத் தெரிந்து அதன் இலக்கத்தை சதுரத்தினுள் எழுதுக**

| | | |
|---|---|---|
| 42. புரதம் | ☐ | 1. முட்டை |
| 43. கனியச்சத்து | ☐ | 2. தோடம்பழம் |
| 44. உயிர்ச்சத்து | ☐ | 3. வற்றாளங் கிழங்கு |
| 45. கொழுப்பு | ☐ | 4. அகத்திக்கீரை |
| 46. மாப்பொருள் | ☐ | 5. எள்ளுருண்டை |

**கீழே உள்ள பழமொழிகளைப் பூர்த்தி செய்ய இடைவெளிகளை நிரப்புக.**

48. அடம்பன் கொடியும் ..................................

49. சிறு துளி .................................................. வெள்ளம்.

50. ............................................எதுவும் அசையாது

**பின்வரும் வினாக்களுக்கு விடையை புள்ளிக் கோட்டில் எழுதுக.**

51. பாலா புத்தகக் கடைக்குச் சென்று ரூபா 120 விலையுள்ள ஐம்பது புத்தகங்களை வாங்கினார். அவருக்கு 20 வீதம் கழிவு கிடைத்தது. அவர் கொடுக்க வேண்டிய பணம் எவ்வளவு?

..................................................

52. குமாரும், தேவனும் மணல் அள்ளிக் கொட்டும் வேலையில் ஈடுபட்டார்கள். குமார் 5 கூடை கொட்டும் போது தேவன் 4 கூடை கொட்டுவான். இருவருமாகச் சேர்ந்து 2745 கூடை மணல் அள்ளிக் கொட்டி இருந்தால் தேவன் கொட்டிய மணல் கூடைகள் எத்தனை?

..................................................

53. 2 வாரம் 3 நாள் 15 மணித்தியாலத்தை, மணித்தியாலத்தில் எழுதுக?

..................................................

54. அஸ்வாக் 225 சென்றிமீற்றர் வயர் வாங்கி வந்தார். அதனை மீற்றர் சென்றிமீற்றரில் எழுதுக?

............ m. cm.

55. அஜிதா தனது சம்பளத்தில் 1/9 ஐ உணவுக்கும் 1/3 ஐ உடைக்கும் செலவு செய்த பின் ரூபா 500 ஐச் சேமிக்கிறார். அவரது சம்பளம் யாது?

..................................................

56. தந்தையினதும், மகனதும் வயது மூன்று வருடங்களுக்கு முன்பு 48 ஆகும். இப்பொழுது மகனின் வயது 19 எனின் தந்தையின் வயது என்னவாக இருக்கும்?

..................................................

57. திவ்யாவிடமும், சர்மினியிடமும் 150 மாபிள்கள் உள்ளன. சர்மியிடம் உள்ள மாபிள்களில் 15 ஐ கவிதாவுக்கு கொடுத்தாள். இருவரிடமும் உள்ள மாபிள்களின் எண்ணிக்கை சமனாகும். சர்மினியிடம் இருந்த மாபிள்களின் எண்ணிக்கை 65 ஆகும். சர்மினியிடம் ஆரம்பத்தில் இருந்த மாபிள்கள் எத்தனை?

..................................................

58. ஒரு மாணவர் விடுதிக்கு சஜித்குமார் 3150 மாம்பழங்களைக் கொடுத்தார். ஒரு பிள்ளைக்கு 7 வீதம் 15 நாட்களுக்கு அந்த மாம்பழங்கள் போதுமானது. அவ்விடுதியில் எத்தனை பிள்ளைகள் இருக்கிறார்கள்?

..................................................

59. ஒரு பொதியில் பென்சில்களைப் போன்று மூன்று மடங்கு கொப்பிகள் இருந்தன. பென்சில்களை விட மூன்று குறைவாக பேனைகள் இருந்தன. அங்கு 4 பேனைகள் இருந்தன. எனின் அதில் இருந்த மொத்த பொருட்களின் எண்ணிக்கை யாது?

..................................................

60 ஒரு அன்னாசியின் விலை ஒரு தோடம்பழத்தின் விலையைப் போன்று இரு மடங்காகும். 5 தோடம்பழங்களினதும் 2 அன்னாசிப்பழங்களினதும் விலை 36 ரூபா எனின், ஒரு அன்னாசிப் பழத்தின் விலை யாது?

..................................................

**பின்வரும் சொற்களை ஆங்கில மொழியில் எழுதுக.**

61. கதிரை : .............. 62. அதிபர் : .............

63. வகுப்பறை : ........... 64. சந்தை: ..............

65. தகப்பன் : ..............

**பின்வரும் தமிழ்ச்சொற்களை சிங்கள மொழியில் சிங்கள எழுத்துக்களைப் பயன்படுத்தி எழுதுக.**

66. ஒன்று : .............. 67. அம்மா : ..............

68. அடுப்பு : .............. 69. கத்தி : ..............

70. சோறு : ..............

**பின்வரும் இரு வாக்கியங்களை ஒரு வாக்கியமாக எழுதுக.**

71. கமலா இனிமையாக பாடினாள்.
விமலா இனிமையாகப் பாடினாள்.

72. அம்மா சோறு சமைத்தாள்.
அம்மா வடை சுட்டாள்.

73. மல்லிகைப்பூ மிக அழகானது.
மல்லிகைப்பூ மிக வாசனை உடையது.

74. ஆசிரியர் வகுப்புக்கு வந்தார்.
ஆசிரியர் பாடம் படிப்பித்தார்.

75. நேற்று கடும் காற்று வீசியது.
மரங்கள் முறிந்து விழுந்தன.

76. பரதன் நாட்டை ஆண்டான்.
இராமன் காட்டுக்குச் சென்றான்.

T.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp.Trd
ஆசிரிய ஆலோசகர் மேல்மாகாணம்





# மாணவர் மலர்

**மாணவர்களை பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும், உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்கு நடத்தப்படும் மாதிரிப் பரீட்சை வினாத்தாள் - 2005**

◆ **இல 01 முதல் 10 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01. தாவரங்கள் உணவு தயாரிக்கப்பயன்படுத்துவது?
i) ஒளி ii) சூரிய ஒளி iii) நீர் iv) புழு

02. வரட்சியான பிரதேசத்தில் வளரும் பயிரினம்
i) தோடை ii) நாகதாளி iii) பலாமரம் iv) அன்னாசி

03. வகுத்தல் என்பதைக் குறிக்கும் கணிதக் குறியீடு.
i) + ii) - iii) ÷ vi) x

04. அனைத்து உடைமைகளையும் இழந்தவன்.
i) அநாதை ii) அகதி iii) வறியவன் iv) உலோபி

05. தாவரம் ஒன்றுக்கு மாத்திரம் உள்ள இயல்பு பின்வருவனவற்றில் எது?
i) வளர்தல் ii) காய்தல் iii) நிழல்தருதல் iv) அசைதல்

06. பின்வருவனவற்றுள் இலைவகையை உண்ணும் பிராணி?
i) மண்புழு ii) பல்லி iii) நத்தை iv) அட்டை


07. மின்சாரத்தை இலகுவில் கடத்தக் கூடியது?
i) பலகைத் துண்டு ii) இரும்புச்சட்டம்
iii) செப்புக்கம்பி iv) அலுமினியக்கம்பி


08. தையல் வகையில் ஒன்று?
i) ஊசி ii) நூல் iii) சங்கிலித் தையல் iv) துணி

09. வாகனங்களுக்கு எரிபொருளாகப் பயன்படுத்தப்படாதது.
i) டீசல் ii) மண்ணெய்
iii) பெற்றோல் iv) தேங்காய் எண்ணெய்

10. தச்சன் பலகையைச் சீவுவதற்குப் பயன்படுத்தும் உபகரணம்.
i) துறப்பணம் ii) வாள் iii) சீவுளி iv) அரம்

◆ **இல 11 முதல் 20 வரையான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக.**

11. 
இங்கு நிழற்றப்பட்டிருப்பது முழு உருவின் என்ன பின்னமாகும்.
i) 8/5 ii) 3/8 iii) 3/4 iv) 2/4

12. 
இக்கடிகார முகத்தின் மணித்தியால முள் சரியாக 10 ஐக் காட்டுகிறது அன்படி நிமிடமுள் இருக்க வேண்டிய முறையை இக்கடிகார முகத்தில் வரைந்து காட்டுக.

13. 
இந்த உருவில் காணப்படும் முக்கோணிகளின் ஆகக் கூடிய எண்ணிக்கை யாது?

14. 5, 10, 20, ☐ 80, 160 இந்த எண்கோலத்தில் வெற்றுக்கூட்டுக்குப் பொருத்தமான எண்ணை எழுதுக.

15. ☐ (6 cm × 6cm) படத்தில் உள்ள சதுரத்தின் சுற்றளவு யாது?

16. இரு எண்களின் கூட்டுத்தொகை 80. அவ்விரு எண்களிடையே உள்ள வித்தியாசம் 20. அவ்விரு எண்களும் எவை?

..................................................

17. $4824 = 4000 + \square + 20 + 4$ பெட்டிக்குள் வர வேண்டிய எண்ணின் பெறுமதி யாது?

..................................................

18. 3 Kg தேயிலையை 500 g கொண்ட பைக்கற்றில் அடைக்க எத்தனை பைக்கற் தேவை?

..................................................

19. ஆயிரம் ரூபாத்தாளின் நிறம் யாது?

..................................................

20. 32 நெல்லிக்கனிகளையும் 8 பேருக்குச் சமனாகக் கொடுக்க வேண்டுமெனின், ஒவ்வொருவருக்கும் எத்தனை நெல்லிக்கனிகள் கிடைக்கும்?

..................................................

◆ **இல 21 முதல் 26 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக.**


21. காட்டுக்கு ராஜா எது எனத் தெரிந்து அதன் கீழ் கீறிடுக.




22. சீனியுடன் தொடர்புடைய பொருள் எதுவெனக் கோடிடுக.





23. நன்றி உள்ள மிருகம் யாது? கோடிடுக.




24. பௌத்த சின்னம் எதுவெனக் கீறிடுக.



25. கீழே காணப்படும் பிராணிகளில் வீட்டில் வளரும் பிராணி எது?



26. கீழே காணப்படும் பிராணிகளில் தாவர உணவை உண்ணும் பிராணி எது?



## மாணவர் மலர் - ii

◆ இல 27 முதல் 31 வரையுள்ள வினாக்களில் 'அ' பகுதிக்குப் பொருத்தமான விடையை 'ஆ' பகுதிக்குப் பொருத்தமான விடைக் கூட்டிற்குள் இடுக.

| 'அ' | | 'ஆ' |
|---|---|---|
| 27 முள்ளந்தண்டு இல்லாதது. | ☐ | A ஆணிவேர் |
| 28. இரவில் கண் நன்றாகத் தெரியும் | ☐ | B ஆமை |
| 29. மூங்கில் மரங்கள் | ☐ | C மண்புழு |
| 30. முட்டையிட்டு இனப் பெருக்கம் செய்யும் | ☐ | D ஆந்தை |
| 31. பலாமரம் | ☐ | E நாருருவேர் |

◆ பின்வரும் பாடலைப் படித்து 32 முதல் 36 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

சின்னச் சின்னத் தேனீ
சிறுமை இல்லாத தேனீ
உன்மைப் போல நானும்
உலகை வலம் வரவேணும்.

அன்னை தன்னைப் பேணும்
அன்பு மிக்க தேனீ
வண்ண வண்ணப் பூவை
வளைந்து வரும் தேனீ

32. தேனீயிடம் இல்லாத குணம் யாது?
..........................................................


33. தேனீ வண்ண வண்ணப் பூவை ஏன் வளைந்து வருகிறது?
..........................................................


34. தேனீயைப்போல் தான் என்ன செய்ய வேண்டும் எனக் கவிஞர் கூறுகின்றார்?
..........................................................

35. இப்பாடலில் உள்ள அடுக்குமொழி இரண்டு தருக.
1 .......................... 2..........................

36. ஒத்த சொல் தருக.
1. வண்ணம்............ 2. அன்பு............

◆ இல 37 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள உருவங்களில் ஒன்று பொருத்தமற்றது. அதன் கீழ் கோடிடுக.

37.


38.


39.


40.


எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.

கீழே கொடுக்கப்பட்டுள்ள ஒரு குடும்பத்தின் பரம்பரை அமைந்த விதமாகும். அதனை நன்கு அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.

அமலன் + கவிதா
(கணவன்) (மனைவி)

→ செல்வன் + கவிதா (கணவன்) (மனைவி); தர்சன்; விமலா + ஈஸ்வரன் (மனைவி) (கணவன்)

→ செல்வன் + கவிதா: சுந்தர் கீதா (கணவன்) (மனைவி), மலர்

→ விமலா + ஈஸ்வரன்: ரவி, ராஜா, சுந்தரி

01. இவர்களில் இப்பொழுது இளையவராக இருக்கும் பெண்கள் இருவரின் பெயர்களை எழுதுக?
1. ..........................................
2. ..........................................

02. இவர்களில் திருமணம் செய்யாதிருக்கும் முதியவர் யார்?
..........................................

03. சுந்தர், விமலா ஆகியோரின் உறவு முறை யாது?
..........................................

04. அமலனுக்குள்ள ஆண் பிள்ளைகள் எத்தனை பேர்? பெயர்களைக் குறிப்பிடுக.
..........................................

05. கவிதாவின் மகனது பெயர் என்ன?
..........................................

06. மலரின் தந்தையின் பெயர் யாது?
..........................................

07. அமலனுக்கு ரவி என்ன முறை?
..........................................

08. சுந்தரிக்கு ராஜா என்ன உறவு முறை?
..........................................

09. சுந்தரிக்கு தர்சன் என்ன உறவு முறை?
..........................................

10. மலருக்கு தர்சன் என்ன உறவு முறை?
..........................................

பின்வரும் சொற்களுக்கு எதிர்க்கருத்து எழுதுக.

11. சகுனம் ..........................
வீரன் ..........................

12. ஐக்கியம்..........................
உருவம் ..........................

## மாணவர் மலர் - iii

இல 13 - 22 வரை உள்ள வினாக்களில் கூறப்படும் கருத்து சரியாயின் (சரி) என்றும் பிழையாயின் (பிழை) என்றும் புள்ளிக் கோட்டில் எழுதுக.

13. உடுக்குதோலாற் செய்யப்பட்ட கருவியாகும். (.....)

14. கைப்பந்து ஒரு குழு விளையாட்டாகும். (.....)

15. சூரியன் பூமியைச் சுற்றுவதால் இரவு பகல் ஏற்படுகிறது. (.....)

16. கவிதா காற்றாடி ஒன்றைத் தயாரிப்பதற்கு றப்பர் விதையைப் பயன்படுத்தினாள். (.....)

17. ஓடிவிளையாடு பாப்பா என்னும் பாடல் ஔவையாரால் பாடப்பட்டது. (.....)

18. தேசிய கீதத்தைப் பாடியவர் திரு சுனில் சாந்த (.....)

19. தராசு இரண்டாம் வகை நெம்புகோல் ஆகும். (.....)

20. சிவப்பு நிறத்தையும், மஞ்சள் நிறத்தையும் கலக்கும் போது செம்மஞ்சள் நிறம் உண்டாகும். (.....)

21. மூளையை மாற்றுச் சிகிச்சை மூலம் மனிதனுக்குப் பொருத்த முடியும். (.....)

22. இலங்கையின் தேசிய விழாக்களில் மே தினமும் ஒன்றாகும். (.....)

'அ' பகுதிக்குப் பொருத்தமான வாக்கியத்தை / சொல்லை 'ஆ' பகுதியில் இருந்து தெரிந்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

அ பகுதி
23. ஒரு நாளின் உஷ்ணத்தை அளப்பது
24. மரங்களில் இருக்கும் நீர் ஆவியாக வெளியேறுவதற்கு
25. உப்பு தயாரிக்கும் இடம்
26. நுளம்பால் ஏற்படும் பயங்கர நோய்
27. தாதுசேனனால் கட்டப்பட்டது
28. தன்னுடைய நிழல் தன்னுடைய காலால் மிதிபடும் நேரம்
29. மரங்கள் காய்ந்து ஒன்றோடொன்று உரசும் போது
30. விவசாயிகளின் நண்பன்
31. கன்று வளர்வதற்கு பசளை தேவை அதோடு
32. நமது நாட்டின் தேசிய மரம்

| இலக்கம் | ஆ பகுதி |
|---|---|
| ......... | 1. கலாவாவி |
| ......... | 2. பகல் 12 மணி |
| ......... | 3. ஓணான் |
| ......... | 4. வெப்பமானி |
| ......... | 5. உப்பளம் |
| ......... | 6. நாகமரம் |
| ......... | 7. டெங்கு காய்ச்சல் |
| ......... | 8. சூரிய ஒளி தேவை |
| ......... | 9. வெயில், மழை, காற்று தேவை |
| ......... | 10. தீப்பற்றும் |

கீழே உள்ள சைகைகளை அவதானித்து அவை குறிப்பிடும் குறிப்பை புள்ளிக் கோட்டில் எழுதுக.

33.

..........................................

34.

..........................................

35.


..........................................

36.


..........................................

37.

..........................................

38.

..........................................


39.

..........................................

40.

..........................................

41.

..........................................

42.

..........................................

# பனை வளத்தை அழிவிலிருந்து பாதுகாக்க திணைக்கள தலைவர்கள் முன்வரவேண்டும்

## பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பொறுப்பாளர்

(கிளிநொச்சி)

தமிழினத்தின் அடையாளச் சின்னமான பனை வளத்தை அழிவுகளிலிருந்து பாதுகாக்க அனைத்து அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் தலைவர்கள் முன்வர வேண்டும்.

இவ்வாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பொறுப்பாளர் சி.கரிகாலன் தெரிவித்தார்.

இது தொடர்பாக பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

எமது தேசத்தின், எமது இனத்தின் அடையாளச் சின்னமான பனை வளம் திட்டமிட்ட வகையில் இராணுவத்தினராலும் - அதேவேளை தங்களது வீட்டுத் தேவைகளுக்கென எமது மக்களாலும் கண்மூடித்தனமாக அழிக்கப்பட்டுவருகின்றது.

சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களாலும் இந்த வளம் பெருமளவு அழிவுற்ற நிலையில் இந்த வளத்தை மேலும் அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டியது ஒவ்வொரு தமிழ்க் குடிமகனினதும் கட்டாய தேவையாகும்.

அந்த வகையில் தமிழ்த் தேசத்தில் பணிபுரியும் அரச திணைக்களத் தலைவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர்கள், துறைசார் பொறுப்பதிகாரிகள், பொதுமக்கள் என அனைவரும் இந்த விடயத்தில் அதி கூடிய கவனத்தைச் செலுத்தி பனை வளத்தை அழிவிலிருந்து பாதுகாக்க அக்கறையுடன் செயற்படவேண்டும்.

அதேவேளை கட்டட நிர்மாணங்களுக்கு இடையூறாக இருக்கும் பனை மரங்கள், குடிமனைகளுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் பனை மரங்கள், பட்ட நிலையில் இருக்கும் பனை மரங்கள் ஆகியவற்றைத் தறிப்பவர்கள் தமிழீழ பொருன்மிய மேம்பாட்டு நிறுவன பிரதேச இணைப்பாளர்களுடன் தொடர்பு கொண்டு - மாவட்ட பொறுப்பாளர்களின் அனுமதியுடன் தறிக்குமாறும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

### மனையியல் கண்காட்சி

கரவெட்டி பிரதேச செயலக பிரிவு மாதர் அபிவிருத்தி நிலையம் நடத்தும் தையல் மனையியல் கண்காட்சி எதிர்வரும் 18 ஆம் திகதி காலை 10 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமியும் - சிறப்பு விருந்தினராக மாவட்ட செயலக உதவி அரசாங்க அதிபர் தலைமைப்பீடத்தைச் சேர்ந்த வே.வீரபத்திரபிள்ளையும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இந்தக் கண்காட்சியைப் பிரதம விருந்தினர் ஆரம்பித்துவைக்கவுள்ளார்.

# முதுமாணிக் கற்கைநெறி; ஆரம்ப நிகழ்வும், கருத்தரங்கும்

(யாழ்ப்பாணம்)

ஐ.ஐ.எஸ் நிறுவனம் சிலிங்கோ நிறுவனத்தின் உயர் கல்விச் செயற்பாட்டிலுள் ஐ.சி.பி.ரி. நிறுவனத்துடன் இணைந்து ஆரம்பிக்கப்படவிருக்கும் தொழில் நிர்வாகத்தில் முதுமாணிக் கற்கை நெறிக்கான ஆரம்ப நிகழ்வும் வழிகாட்டல் கருத்தரங்கும் எதிர்வரும் சனிக்கிழமை மாலை 3 மணிக்கு ஐ.ஐ.எஸ் பிரதான மண்டபத்தில் - இயக்குனர் விக்னேஷ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் மணிபல் பல்கலைக்கழகத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகளும், ஐ.சி.பி.ரி. நிறுவனத்தின் தலைவர் ஜெகத் அல்விஸ் மற்றும் பொது முகாமையாளர் மொகான் பத்திரன மற்றும் -

நிறுவனத்தின் உயர் மட்டப் பிரதிநிதிகளான அனுரா கமகே, நிரோஜன் மடமிற்றிகே ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

முதுமாணிக் கற்கைநெறியில் ஆர்வமுடையோர் இந்தக் கருத்தரங்கில் கலந்து சிறப்பிக்குமாறு ஐ.ஐ.எஸ் நிறுவனம் அழைப்பு விடுத்துள்ளது.

# வலி.தென்மேற்கு பிரதேச சபையில் ஆணைக்குழு அமைக்க தீர்மானம்!

(சுதுமலை)

மானிப்பாய் பிரதேசத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் நோக்கில் - வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையில் இந்த வருடத்துக்கான அபிவிருத்தி ஆலோசனைக் குழுவொன்று அமைக்கப்படவுள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட அரச மற்றும் அரச சார்பற்ற மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளில் 14 பேரைத் தெரிவுசெய்து தமக்கு அனுப்பி வைக்குமாறு - யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா, மானிப்பாய் பிரதேச சபையைக் கேட்டுள்ளார்.

இந்த ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ள முகாமைத்துவ சூழல் தொடர்பான அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய விடயங்கள் இந்த ஆலோசனைக் குழுவின் பரிந்துரையின் பிரகாரமே மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : தி.ராகவி
முகவரி : அல்வாய்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.


## மதுபோதையில்

# மோட்டார் சைக்கிளைச் செலுத்தியவர் பொலிஸாரிடம் வசமாகச் சிக்கினார்!

(கோண்டாவில்)

மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்தியவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டார்.

இந்தச் சம்பவம் கோப்பாய் பொலிஸ் நிலையப் பகுதியில் இடம் பெற்றுள்ளது. மதுபோதையில் மேற்படி பகுதியில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திவந்த நவாலியைச் சேர்ந்த ஒருவரே, நள்ளிரவுவேளை ரோந்து சென்ற பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இந்த நபருக்குத் நீதிவான் ஆர்.ரி. விக்னராஜா 3500 ரூபா குற்றப்பணம் செலுத்துமாறும்- இவரிடம் சாரதி அனுமதிப் பத்திரம், தலைக்கவசம் மற்றும் மோட்டார் சைக்கிளுக்கான இலக்கத் தகடு உள்ளிட்ட ஆவணங்கள் எதுவும் இல்லாத காரணத்தால் மேலதிகமாக 2000 ரூபா தர்மப்பணமாகவும் செலுத்துமாறும் உத்தரவிட்டுத் தீர்ப்பளித்தார். (82)

# உளவளத்துறை ஆசிரியர்களுக்கு மூன்றுவாரகாலப் பயிற்சிநெறி!

கல்வியமைச்சு, ஜி.ரி.இசற் நிறுவனம் இணைந்து செயற்படுத்தும் அடிப்படைக் கல்வி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட உளவளத்துணை ஆசிரியர்களுக்கு உயர் பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

ஜேர்மனியிலிருந்து வருகைதந்திருந்த கலாநிதி எலிசபெத் தலைமையிலான குழுவினரால் கடந்த மூன்று வாரங்களாக சாந்திகம் நிறுவனத்தில் இந்தப் பயிற்சிகள் நடத்தப்பட்டுவருகின்றன.

உளவளத்துணையில் உயர் பயிற்சி நெறியான - மனவடுக்களுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு உதவும் சம்பவ விபரிப்பு சிகிச்சை நெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை ஜி.ரி.இசற் நிறுவன தொழில்நுட்ப ஆலோசகர் சுந்தரம் டிவகலாலா தலைமையில் நடைபெற்றது.

ஜி.ரி.இசற் நிறுவன அடிப்படைக் கல்வி நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளர் கலாநிதி ஜோற்ஹைட் ஹீக் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இந்த நிகழ்வில் - சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்தைச் சேர்ந்த பேராசிரியர் தயா சோமசுந்தரம், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் சி.விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (31)

# 'ஊடகவியலாளர்களுக்கு ஓர் அறிமுகம்' பயிற்சிப் பட்டறையும், சான்றிதழ் வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

பாதுகாவலன் பத்திரிகையும், சமூக தொடர்பு ஆணைக்குழுவும் இணைந்து நடத்திய ஊடகவியலுக்கு ஒரு அறிமுகம் எனும் பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்டவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு - கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் பாதுகாவலன் ஆசிரியர் அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை தலைமையில் இடம்பெற்றது.

பாதுகாவலன் பத்திரிகையும், சமூக தொடர்பு ஆணைக்குழுவும் இணைந்து ஒவ்வொரு வருடமும் நடத்திவரும் இந்தப் பயிற்சிப் பட்டறை மூன்று நாட்களாக நடைபெற்றது.

இந்த ஆண்டு குருப்பட்டம் பெறும் அருட்சகோதரர்கள், சென்ற ஆண்டின் ஊடக கழகப் பயிற்சியின்போது யாழ்.மாவட்ட சமூக தொடர்பு ஆணைக்குழுவால் தயாரிக்கப்பட்ட 'மௌன உணர்வுகள்' குறும்திரைப்படம் காண்பிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் அமலமரித் தியாகிகள் சபையின் வடமாகாண அதிபர் அருட்திரு ஜீவேந்திரா போல் பயிற்சிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார்.

### வருடாந்த மஹோற்சவம்

(மாதகல்)

மாதகல் நுணசை அருள்மிகு ஸ்ரீ முருகமூர்த்தி ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 9 தினங்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 23 ஆம் திகதி இரதோற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம் பெறவுள்ளது.

# சாவகச்சேரியில் நடைபெற்ற பேரணியில் மகஜர்கள் கையளிப்போரும், கலந்துகொண்டோரும்



# சமாதானம் மீது நம்பிக்கை கொண்டுள்ள தமிழினத்திற்கு நீதியை பெற்றுத்தாருங்கள்!

## கிளிநொச்சி மாவட்ட வெகுஜன அமைப்புக்கள் ஒன்றியம் மகஜர்

விடுதலைப் புலிகளிடம் இடைக் காலத் தன்னாட்சி அதிகாரத்தை வழங்கக் கோரியும், விடுதலைப் புலிகளின் போராளிகள் மீது படையினருடன் இணைந்த ஆயுதக் குழுக்களால் நடத்தப்படும் தாக்குதல்களைக் கண்டித்தும் நேற்று கிளிநொச்சியில் மாபெரும்பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

இந்தப் பேரணியில் கிளிநொச்சி மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தால் சர்வதேச சமூகத் தலைவர்கள், பிரதிநிதிகள், இராஜதந்திரிகள் ஆகியோருக்கு மாவட்ட அரச அதிபர் ஊடாகவும், இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்பு குழு ஊடாகவும் மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

அந்த மகஜரில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது -

இலங்கைத்தீவில் கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாகப் புரையோடிப்போயுள்ள இனப்பிணக்கையும், தமிழர் உரிமை மறுப்பையும் அடுத்து நிகழ்ந்த கொடுமையான யுத்தத்தின் பெறுபேறாக சர்வதேச மூன்றாம் தரப்பு அனுசரணையுடன் போர்நிறுத்தம் கைச்சாத்திடப்பட்டு, சமாதான முன்நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த முயற்சியில் தமிழர் தரப்பு பிரதிநிதிகளான விடுதலைப் புலிகள் உலக புறநிலை யதார்த்தங்களின் அடிப்படையிலும், மிகுந்த விட்டுக்கொடுப்புடனும், இதய சுத்தியுடனும் பேச்சுக்களில் பங்கேற்று வந்தனர்.

இந்தநிலைமை தாங்கள் அறிந்த ஒன்றாகவே இருக்கும். தனி நாடு ஒன்றைக் கோரிப் போராடிய தமிழ் மக்களாகிய நாம் அழிந்து போன எமது பிரதேசங்களை மீளக்கட்டியெழுப்ப இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை ஒன்றை சமாதான முன்னெடுப்புக்களின் போது முன்வைத்து, சமாதான முயற்சிகளின் வெற்றிக்காகப் பாரிய பங்களிப்பை நல்கினோம். எனினும் துரதிர்ஷ்டவசமாக அரசின் பலமற்ற அரசாங்க இயந்திரம் - தீவிரமான சிங்களப் பேரினவாத சக்திகளின் எதிர்ப்பு என்பவற்றால் தமிழ் மக்களின் இடைக் காலத் தன்னாட்சி அதிகாரசபைக் கோரிக்கை உதாசீனம் செய்யப்பட்டது.

இந்தநிலையில் பேச்சுவார்த்தைக்கான தீர்வு முயற்சிகளை அரசு பலவீனமடையச்செய்து, யுத்த முனைப்பு செயற்பாடுகளில் தீவிரம் காட்டிவந்தமை தமிழ் மக்களை கவலை கொள்ளச் செய்கிறது. இத்தகைய சூழ்நிலையில் டிசம்பர் 26 ஆம் திகதி நடந்த சுனாமி கடற் தாக்கம் தமிழர் தாயகப் பிரதேசங்களில் பாரிய அழிவை உண்டு பண்ணியதுடன், எமது மக்களை நிர்க்கதியான அவலச்சூழ்நிலைக்குத்தள்ளியது.

இந்த வேளையில் ஏற்கனவே தளர்ந்து போயுள்ள சமாதானச் சூழ்நிலைக்குப் பலம் சேர்க்கும்வகையில் சுனாமிக்குப் பின்னரான புனர்வாழ்வு, புனரமைப்பிற்கென அரசும், புலிகளும் இணைந்த பொதுக்கட்டமைப்பை தமிழர் தரப்பு அரசிடம் கோரி நின்றது. எமது மக்கள் 20 வருட கால யுத்தத்தினாலும், சுனாமியின் பெரும் தாக்கத்தினாலும் பாரிய வாழ்வியல் அவலங்களைச் சந்தித்து நிற்கும் வேளை - அரசு பொதுக் கட்டமைப்புக்கோரிக்கையை ஏற்பது போல, சர்வதேச சமூகத்துக்கு காட்டிக் கொண்டு காலங்கடத்துவதன் மூலம் அனர்த்த முகாமைத்துவ பொதுக்கட்டமைப்புக் கோரிக்கையையும் புறந்தள்ளும் வகையில் செயலாற்றி வருகிறது.

சுனாமி தாக்கம் நிகழ்ந்து 100 நாட்கள் கடந்து விட்ட நிலையிலும், சர்வதேச சமூகத்தினால் அரசுக்கு வழங்கிய சுனாமி நிவாரண உதவிகள் எதுவும் தமிழர் தாயகத்தில் அவலப்படும் எம்மக்களை வந்தடையவில்லை என்பது வேதனைக்குரியதாகும். அது மாத்திரமின்றி சுனாமியால் பாரிய தாக்கத்துக்குள்ளான இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் திட்டமிடப்பட்ட முறையில் அரச புலனாய்வுப் பிரிவினர் தமிழர் தரப்புப் பிரதிநிதிகளான புலிப் போராளிகள் மீது மேற்கொண்டு வரும் தாக்குதல்களும், தாக்குதல் முயற்சிகளும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை ஏமாற்றமடையச் செய்திருக்கிறது. கூடவே சமாதான முயற்சிகள் சுனாமி பொதுக் கட்டமைப்பு யுத்த நிறுத்த உடன்படிக்கை போன்ற ஏற்பாடுகள் மீது நம்பிக்கையீனத்தையும், கேள்விகளையும் உருவாக்கச் செய்துள்ளது.

எனவே கடந்த 03 வருட காலமாக உலகம் அரசுகளினதும், சர்வதேச ஸ்தாபனங்களினதும் எதிர்பார்ப்புக்கு அமைவாக நாகரிகமான தீர்வு முயற்சிகளில் ஈடுபட்டு வந்த தமிழ் மக்களுடைய இன்றைய கையறு நிலையை சர்வதேச சமூகம் புரிந்து கொள்ள வேண்டுமென, தமிழ் பேசும் மக்களாகிய நாம் எதிர்பார்க்கிறோம். உலகில் இனப்பிணக்குகளுக்குள்ளான தேசிய இனங்களுக்கு என வகுக்கப்பட்டிருக்கும் சர்வதேச நியதிகளுக்கு உட்பட்ட கௌரவமான அரசியல் தீர்வை அரசினூடாகப் பெற்றுத்தருவதற்கு தங்களின் தார்மீக செயல்முறையை எதிர்பார்க்கிறோம்.

தயவு செய்து இந்த மனுவை தகுந்த முறையில் பரிசீலனை செய்து, தங்களின் தார்மீக கடமைகளைச் சரிவர ஆற்றுவீர்களேயானால், அரசின் இன்னுமொரு கொடிய யுத்தத்துள் இருந்து தமிழ் மக்கள் பாதுகாக்கப்படுவார்கள் என்பதே யதார்த்தமானதாகும். சமாதான தீர்வின் மீது உயர்ந்த நம்பிக்கை உள்ள எமது இனத்துக்கு, அரசியல் நீதி பெற்றுத் தருமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறோம் என அந்த மகஜரில் தெரிவிக்கப் பட்டுள்ளது.




## சுழற்சி முறை கடனுதவி

கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தினரால் ஒக்ஸ்பாம் நிறுவன நிதியுதவியுடன் இராமநாதபுரம் ஆலடி பகுதி பயனாளிகள் 20 பேருக்கு கடனுதவிகள் வழங்கப்பட்டன.

இந்தப் பகுதியைச்சேர்ந்த 15 பயனாளிகளுக்கு நெற்செய்கையை மேற்கொள்வதற்கென தலா 15 ஆயிரம் ரூபாவும், 5 பயனாளிகளுக்கு சிறுவியாபாரத்தை மேற்கொள்வதற்கென தலா 10 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டது.

சுழற்சிமுறை கடனுதவிமூலம் வழங்கப்பட்ட இந்தப்பணம் குறித்த தவணையின் பின்னர் மீள வசூலிக்கப்படும் என, கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தினர் தெரிவித்தனர். (இ)

## பொருட்கள் அன்பளிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவனம், போரூட் நிறுவன அனுசரணையுடன் இராமநாதபுரம் மாவடிக் கிராமத்தில் குடியிருப்பு வசதியற்ற, மிகக் குறைந்த வருமானம் பெறும் 10 குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகளை அமைப்பதற்கான பொருட்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இந்த பொருட்களைக் கொண்டு வீடமைப்பு பணிகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன. (இ)

## இரங்கல் திருப்பலியும் அஞ்சலி நிகழ்வும்

புனித பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக கடந்த வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட கத்தோலிக்க மக்களால் இரணைப்பாலை பத்திமா அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலியும், அஞ்சலி நிகழ்வும் இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட கத்தோலிக்க குருமார் ஒன்று சேர்ந்து இரங்கல் திருப்பலியான கூட்டுத்திருப்பலியை நிறைவேற்றினர்.

தொடர்ந்து இரணைப்பாலை பங்குத்தந்தை வணபிதா ஆனந்தகுமார் அடிகளார் தலைமையில் இடம் பெற்ற அஞ்சலி நிகழ்வில் - அஞ்சலி உரையை முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் நிகழ்த்தினார். சிறப்புரையை முல்லைத்தீவு பங்குத்தந்தை வணபிதா ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளார் ஆற்றினார். தொடர்ந்து பொது அமைப்புகளின் ஒன்றியத்தினால் அனுதாபச் செய்தி வாசிக்கப்பட்டது.

இந்த இரங்கல் திருப்பலி நிகழ்விலும், அஞ்சலி நிகழ்விலும் பெருமளவிலான மக்கள் கலந்து கொண்டனர். (வெ)

## தமிழீழ வைப்பகத்தில் புத்தாண்டு கரும பீடம்

(கிளிநொச்சி)

தமிழீழ வைப்பகம் சித்திரைப் புத்தாண்டு தினமான நாளை காலை 7.30 மணி முதல் காலை 11 மணி வரையும் தனது அனைத்து கிளைகளிலும் புத்தாண்டு கருமபீட சேவையை மேற்கொள்ளவுள்ளது.

இந்தச் சேவையின் போது மக்கள் வைப்புக்களை மேற்கொண்டு, 2005 ஆம் ஆண்டுக்கான தேட்டங்களை ஆரம்பிப்பதோடு, வைப்பகத்தினால் வழங்கப்படும் கைவிசேஷத்தைப் பெற்றுக் கொள்வதுடன், அழகிய வர்ணக் கொப்பிகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

அத்துடன்குழந்தைகளுக்கு 10 ஆயிரம் ரூபாவும், அதற்கு மேலும் வைப்புகளை மேற்கொண்டு, அதற்கான சிறப்பு அன்பளிப்பாக அழகிய குடை ஒன்றையும் பெற்றுக் கொள்ளலாம் எனவும், அமுதம் சிறுவர் தேட்டக் கணக்குகளை கொண்டுள்ள சிறார்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வும் இந்த சேவையின் போது இடம்பெறும் எனவும், தமிழீழ வைப்பக நடுவப் பணியக ஆளுகைப்பகுதி மேலாளர் தெரிவித்துள்ளார்.

## காலாவதியான பொருட்கள் புதுக்குடியிருப்பில் அழிப்பு

தமிழீழ நிதித்துறையின் விலைக் கட்டுப்பாட்டுப் பகுதியினரால் புதுக்குடியிருப்பு சந்தைப் பகுதி வணிக நிலையங்களில் கடந்த சனிக்கிழமை திடீரென மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது, பெருமளவு காலாவதியான உணவுப் பொருட்கள், மருந்து வகைகள் என்பன கண்டு பிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன. (வெ)



வட்டக்கச்சி சூசையப்பர் ஆலயத்தில், மறைந்த பாப்பரசருக்கு ஆத்மசாந்தி வேண்டி, பிரார்த்தனையில் ஈடுபட்டிருக்கும் மக்களைப் படத்தில் காணலாம்.
வே.சீலன்

## செயலமர்வு

(கிளிநொச்சி)

இந்த வருடம் கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சை எடுக்கும் விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கான உயிரியல் பாடத்துக்கான செயலமர்வு - இன்று மாலை 4 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வில் உயிரியல் பாட மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு, தமிழீழ மாணவர் அமைப்பினர் கேட்டுள்ளனர்.

## திருடர்களின் கைவரிசை

(கிளிநொச்சி)

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் திருடர்களின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகிறது. இதனால் இந்தப் பிரதேச மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

வட்டக்கச்சி - இராமநாதபுரம் பகுதியில் கடந்த வியாழக்கிழமை இரவு 10 இற்கு மேற்பட்ட வீடுகளில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

## அடிக்கல் நாட்டப்பட்டது

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள உருத்திரபுரம் சிவநகர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் சிறுவர் கணினிப் பூங்கா அமைக்கப் படவுள்ளது.

இதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு - கடந்த சனிக்கிழமையன்று இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் நடராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், கணினிப் பூங்கா அமைப்பதற்கான அடிக்கல்லை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் இராசநாயகம், தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா, கிளிநொச்சி கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஆகியோர் நாட்டி வைத்தனர். (03)

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### ஏப்ரல் - 13

1314 : காற்பந்து விளையாடப்படும் போது கூச்சல் சத்தம் கிளம்புகிறது என்பதனால் இந்த விளையாட்டைத் தடைசெய்வதாக இங்கிலாந்தின் மன்னர் ஆணை பிறப்பித்தார்.

1668: அரசவைக் கவிஞர் என்ற பதவி முதல் இங்கிலாந்தில் ஏற்படுத்தப்பட்டது.

1741 : றோயல் மிலிட்டரி அக்கடமி என்ற பெயரில் இராணுவப் பயிற்சிக் கல்லூரி லண்டனில் தொடங்கப்பட்டது.

1891 : கடற் போரில் நீர்மூழ்கிக் குண்டினால் தாக்கப்பட்டு, போர்க் கப்பல் ஒன்று மூழ்கியது. சிலி போர்க் கப்பலான பிளாஸ்கோ என்கலாடா என்ற கப்பலே நீரில் மூழ்கியது.

1919 : இந்தியாவில் அமிர்தசரஸில் ஜூலியன் வாலாபாக் என்ற இடத்தில் நடந்த பொதுக் கூட்டத்தின் போது, பிரித்தானிய ஜெனரல் 'டயர்' தலைமையில் வந்த படையினர் கண்மூடித்தனமாகச் சுட்டதில் நூற்றுக் கணக்கானோர் பலியானார்கள்.

1933: லோர்ட் கிளைடெஸ்டேல் என்பவர் எவரெஸ்ட் சிகரத்தின் மீது முதன் முதலாக விமானம் மூலம் பறந்து சென்றார்.

1941 : ஜப்பானும் ரஷ்யாவும் தங்களுக்கிடையே ஆக்கிரமிப்புச் செய்வதில்லை என்று ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டன.

1945: இரண்டாம் உலகப் போரின் போது ஜேர்மனி யூதர்களைக் கொன்று குவிக்கப்பயன்படுத்திய இரு மரண முகாம்களான பெல்சன் புச்சன் வால்ட் என்ற இரண்டையும் அமெரிக்க பிரிட்டிஷ் படைகள் கைப்பற்றின. இதன் பின்னரேயே ஜேர்மனியர் புரிந்த கொலைத் தாண்டவம் வெளியே தெரியவந்தது.

1975: சாட் நாட்டில் நடந்த இராணுவப் புரட்சியில் அந்நாட்டு அதிபர் என்கார்ட்டா தாம்பாலிபாயி படுகொலை செய்யப்பட்டார்.

1993: உலக நாடுகளது நாடாளுமன்ற ஒன்றிய மகாநாடு டில்லியில் நடைபெற்றது. 100 நாடுகளைச் சேர்ந்த 500 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.

தொகுப்பு - சந்துரு

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*உறாஅ தவர்போல் சொலினும் செறாஅர்சொல்*
*ஒல்லை உணரப் படும்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## விளங்காப் பொருளா கல்வி?

அண்மையில் வெளியான கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை முடிவுகள் குறித்து பல அதிர்ச்சிகரமான தகவல்கள் வெளிவந்திருக்கின்றன.

இந்தப் பரீட்சையில் அதிதிறமைச் சித்திபெற்ற மாணவர்கள் குறித்து பரபரப்பான தகவல்களைப் பாடசாலைகள் வெளியிட்டுக்கொண்டிருந்த கட்டத்தில்தான் - இந்தப் பரீட்சையில் தவ றிப்போன மாணவர்கள் பற்றிய புள்ளி விபரங்களைப் பரீட்சைத் திணைக்களம் வெளி வியிட்டிருக்கிறது.

3 லட்சத்து 42 ஆயிரத்து 68 மாணவர்கள் தோற்றிய இந்தப் பரீட்சையில் சுமார் 10 சதவீதமான மாணவர்கள் - அதாவது 30 ஆயிரம் பேர் ஒரு பாடத்தில் கூட சித்திபெறவில்லை. அதைவிட பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 45.04 வீதமான மாணவர்களே உயர்தர வகுப்புக்குத் தகுதி பெற்றுள்ளனர். எஞ்சிய 54.6 வீதமான மாணவர் கள் உயர்தர வகுப்புக்குச் செல்லமுடியாத கட்டத்தில் உள்ளனர்.

இங்கு மிகுந்த கவலைக்குரிய விடயம் என்னவெனில் - தோற்றிய மாணவர்களில் 30 ஆயிரம் பேர் - அதாவது 10 வீதமான மாணவர்கள் ஒரு பாடத்திலும் சித்தியடையவில்லை என்பதேயாகும்.

11 வருடங்களாக - பாடசாலையில் கல்விகற்ற 30 ஆயிரம் மாணவர்கள் அடுத்து என்ன செய்வதெனத் தெரியாத நிலைக்குள்ளாகியுள்ளனர்.

இந்தளவு மாணவர்கள் ஒரு பாடத்திலும் சித்தி பெற முடியாமற் போனதற்கு மாணவர்கள் காரணமா, ஆசிரியர்கள் காரணமா, பெற்றோர்கள் காரணமா என்பது விரிவாக ஆராயப்படவேண்டியதொன்றாகும். ஆனாலும் முதற் குற்றச்சாட்டை பாடசாலை மீதே சுமத்தவேண்டும்.

அதேவேளை, பரீட்சைக்குத் தோற்றிய 10 வீதமான மாணவர்கள் நாட்டில் கைவிடப்படும் நிலைக்குள்ளாகியிருப்பது கல்வித் திட்டக் குறைபாட்டையும் வெளிக்காட்டுகிறது.

ஏனெனில் - அடிப்படைக் கல்வியுடன் மட்டுமன்றி தொழில் கல்விப் பாடங்களிலும் கூட இவர்களை சித்தியடைய வைக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றதென்றால், கல்வித் திட்டத்தின் சகல அம்சங்களும் பொருத்தமுடையதொன்றாக அமையவில்லை என்றே கருத வேண்டியுள்ளது.

கல்வியைத் தொடர முடியாத மாணவர்கள் ஏதாவதொரு தொழிற் கல்வியைக் கற்றாவது முன்னேற வேண்டும் என வகுக்கப்பட்ட திட்டம் கூடத் தோல்வியுற்றதையே இது காட்டுகிறது. அதைவிட க.பொ.த சாதாரண தரம் எனும்போது - இன்றைய நிலையில் ஆகக் குறைந்த அடிப்படைக் கல்வித் தகைமையாகக் கருதப்படுகிறது.

இந்த அடிப்படைக் கல்வித் தகைமையைக் கூட 10 வீதமான மாணவர்களுக்கு வழங்க முடியாத நிலையில்தான் இன்றைய கல்வித் திட்டம் இருக்கிறது. மாணவர்களால் புரிந்துகொள்ளமுடியாத வகையில் இருக்கக் கூடிய கல்வித் திட்டங்களால் எந்தப் பயனும் விளையப் போவதில்லை.

இது குறித்து கல்வியியலாளர்கள் இப்போது அவசரமாகச் சிந்திக்க வேண்டியது அவசியமாகும் . அடுத்த தலைமுறைக் கல்வியை ஒரு சொத்தாக வழங்க விரும்பும் நாம் - விளங்காப் பொருளாக அதை அவர்களுக்குக் கொடுக்க முனையக்கூடாது.

க.பொ.த சாதாரணதர தரத்தில் சித்திபெறாத இந்தப் பத்து வீதமான மாணவர்களும் கடந்த 11 ஆண்டுகளாக பாடசாலையில் கவனிக்கப்படாமல் - அவர்களின் குறைபாடுகள் பற்றி சிந்திக்கப்படாமல் இருந்தது கவலைக்குரியதே.

ஒவ்வொரு பாடசாலையும் தமது மாணவர்களில் சிலர்தான் - என்று கருதி வந்ததன் விளைவு ஒட்டுமொத்த புள்ளிவிபரமாக அது வெளிவரும்போதுதான் உணரப்பட்டிருக்கிறது.

மாணவர்களின் புரிதலுக்கு அப்பாற்பட்ட பாடங்கள், அடிக்கடி மாற்றப்படும் கல்வித் திட்டங்கள் எல்லாமே மாணவர்களிடம் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கலாம்.

பதினொரு ஆண்டுகளில் ஒரு மாணவன் எத்தனை பாடத்திட்ட மாற்றங்களுக்கு முகங்கொடுக்க வேண்டி நேரிட்டது என்பது குறித்தும் ஆராயப்படவேண்டியது அவசியமாகும்.


இங்கே ஒரு தரப்பிடம் மட்டும் பிழையையோ சரியையோ சுட்டிக் காட்டிவிட்டு தப்பிவிடாமல், சரியான திசையில் சிந்தித்து அடுத்த தலைமுறையின் கல்வித் தரத்தைப் பாதுகாக்கவேண்டும்.

மாணவர்களுக்கு விளங்காப் பொருளாக கல்வி ஊட்டப்படுவது - அவர்களுக்கு மட்டுமன்றி எவருக்குமே பயனற்றதென்று உணர்ந்து உரிய தரப்பினர் முனைப்புடன் செயற்படவேண்டும்.

# நாடும் நடப்பும்

**செய்தி :**

இலங்கையில் சமாதானத்திற்கு அச்சுறுத்தலாக அரசின் பங்காளிகளான ஜே.வி.பியும், தமிழ் ஆயுதக் குழுக்களுமே செயற்படுகின்றன என அரசியல் நோக்காளர்கள் கருத்து.




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# ஆயுதங்களைக் கொடுத்து புலிகள் கார் வாங்குகிறார்களா ?

நமது ஈழநாடு வாசகர்களுக்கும், உமக்கும் மற்றும் எல்லோருக்கும் உள நிறைந்த வாழ்த்துக்கள் என்று வாழ்த்திக் கொண்டே வந்தடைந்தார் பந்தா பரமசிவம்.

சிவப்புக்கரை பட்டுவேட்டி, பட்டுச்சால்வையுடன் பார்த்திப வருடப்பிறப்பை முறையாகத்தான் பந்தாவோடு கொண்டாடுகிறீர். உமக்கும் என் வாழ்த்துக்கள் என்று சொல்லி வரவேற்றேன்.

நாட்டு நடப்பெல்லாம் எப்படி இருக்கிறது. புதுவருடம் எப்படி இருக்கும். சிங்கள - தமிழ் புத்தாண்டிலாவது நாட்டில் நிரந்தர அமைதிக்கு வழிபிறக்குமா? என்று கேள்விகளை அடுக்கினார் பரமசிவம்.

இந்தக் கேள்விக்கு நீர்தானே பதில் சொல்லவேண்டும். நீர்தான் பந்தாவோடு புறப்பட்டு திரிந்து வந்திருக்கிறீர் என்றேன்.

கொழும்பிலுள்ள ஊடகங்கள் பொறுப்புணர்வோடு நாட்டில் மக்களுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்த முனைந்தால் மிக விரைவிலேயே சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டுவிட முடியும்.

அரசின் கட்டுப்பாட்டிலுள்ள ஏரிக்கரையின் டெய்லி நியூஸ் என்ற ஆங்கிலத் தினசரி நேற்று ஊடக சுதந்திரத்தின் துஷ்பிரயோகம் என்ற தலைப்பில் ஆசிரிய தலையங்கம் ஒன்று எழுதியிருந்தது என்றார் பரமசிவம்.

'சாத்தான் வேதம் ஓதுகிறது' என்று சொல்வது போலிருக்கிறது என்றேன்.

இந்த டெய்லி நியூஸ் பத்திரிகையும், இதன் சகோதரப் பத்திரிகைகளும் முன்பு இடதுசாரிகளால் கடும் கண்டனத்துக்குள்ளாகியிருந்தன.

இந்தப் பத்திரிகைகளை அரசுடமையாக்கவேண்டும் என்று முதலில் குரல்கொடுத்தவர்களும் இடதுசாரிகள்தான். இலங்கையில் இனப்பிரச்சினை மோசமடைந்ததற்கும் இந்த ஏரிக்கரைப் பத்திரிகைகளுக்கும் பெரும் பொறுப்பிருக்கிறது.

1956 - 58 ஆம் ஆண்டுகளில் தமிழ் மக்களுக்கு எதிரான துவேஷத்தைப் பரப்புவதில் இப்பத்திரிகைகள் பெரும் பங்குவகித்தன. இப்பொழுதும் அரசின் கட்டுப்பாட்டிலிருந்தாலும் உண்மையான தேசிய ஒற்றுமைக்காக இந்தப் பத்திரிகைகள் உணர்வுபூர்வமாகச் செயற்படவில்லை.

ஊடக சுதந்திரத்தைத் துஷ்பிரயோகம் செய்வதாக நேற்று டெய்லி நியூஸ் எழுதிய தலையங்கத்தைப் பார்த்ததுமே, நாட்டில் ஒற்றுமை ஏற்படுவதற்கு இடையூறாகவுள்ளவற்றைக் கண்டித்து ஒற்றுமைக்குக் குரல்கொடுக்கப்போகிறதென்று நினைத்தேன்.

ஆனால் கடற்கோள் அழிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வளிப்பதில் அரசாங்கம் செய்துவரும் சேவைகளைப் பாராட்டுகிறது. அரசின் இந்தச் சேவைகளுக்குக் களங்கம் கற்பித்து, தனியார் ஊடகங்கள் பொய்யான செய்திகளையும், தவறான கருத்துக்களையும் வெளியிட்டுவருவதாக அத்தலையங்கம் கண்டித்திருக்கிறது.

கடற்கோளால் பாதிக்கப்பட்ட பகுதிகள் புனரமைக்கப்படுவதாகவும் புனரமைப்பு, புனர்வாழ்வு வேலைகளில் அரசு நல்ல முறையில் செயற்பட்டுவருவதாகவும் தனியார் ஊடகங்கள் அரசின் நல்ல சேவைகளை மறைத்து திரித்து ஏற்கனவே பிளவுபட்டுள்ள மக்கள் மத்தியில் மேலும் பிளவேற்படுத்துவதாகக் கண்டித்திருக்கிறது என்றார் பரமசிவம்.

அரசு கட்டுப்பாட்டிலுள்ள டெய்லி நியூஸ் பத்திரிகையானாலும் சரி, தனியாருக்குச் சொந்தமான ஆங்கில - சிங்களத் தினசரிகள் மற்றும் ஊடகங்களானாலும் சரி, இலங்கையில் போரினாலும் பின்னர் கடற்கோளினாலும் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு - கிழக்கு மக்களு க்கு நீதி, நியாயம் வழங்கப்படுகின்றதா? அங்குள்ள மக்கள் நிலைமை என்னவென்பதுபற்றி உருப்படியாக ஏதாவது செய்திருக்கின்றனவா? எங்கு யார் கடத்தப்பட்டாலும், புலிகள் கடத்தினார்கள். எங்கு எவர் கொலைசெய்தாலும், எவர் கொலை செய்யப்பட்டாலும் இவற்றையெல்லாம் புலிகள் செய்தார்கள் என்றே இந்த ஊடகங்களும், அரசு ஊடகங்களும் செய்திகள் வெளியிட்டு வருகின்றன.

கிழக்கில் புலிகள் இருப்பதாகவும், வன்னிப்புலிகள் என்று தனியாக ஒன்று இருப்பதாகவும் செய்திகள் வெளியிடுவதுடன், தமிழ் மக்கள் பிளவுபட்டு நிற்பதாகக் காட்டும் செய்திகளை வெளியிட்டும் வருகின்றன. தமிழ் மக்களைப் பிளவுபடுத் துவதற்காக ஆனந்தசங்கரி போன்றவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து செய்திகளும், கட்டுரைகளும் வெளியிடுகின்றன. சிங்கள மக்கள் மத்தியில் விடுதலைப் புலிகள் மிகக் கோரமான வர்களாக எடுத்துக் காட்டும் செய்திகளையும், கட்டுரைகளையும் இந்த ஊடகங்கள் வெளியிட்டு வருவதுடன், சங்கரியார் போன்றவர்களைத் தூக்கிப்பிடித்து, தமிழ் மக்கள் மத்தியில் ஒற்றுமை இல்லையென்பதையும் எடுத்துக் காட்ட முயற்சி செய்து வருகின்றன என்றேன் நான்.

நேற்று வெளிவந்த 'த ஐலண்ட்' என்ற பத்திரிகையின் தலைப்புச் செய்தியில் சீருடையில் நின்று, மோட்டார் வாகனங்களை வழிமறித்துப் பரிசோதிக்கும் பொலிஸ் மற்றும் ஆயுதப் படையைச் சேர்ந்தவர்கள் விடயத்தில் மோட்டார் சாரதிகள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்மென்று கோரப்பட்டுள்ளது.

இப்படிப் பரிசோதிப்பவர்கள், தென்னிலங்கையில் இந்த வாகனங்கள் கொள்ளையடிக்கப்பட்டு வடக்கில் புலிகளுக்கு விற்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இத்துடன் ரி.56 ரக துப்பாக்கிகளுக்கு இந்த வாகனங்கள் விற்பனை செய்யப்படுவதாக இச்செய்தி எழுதப்பட்டிருக்கிறது. ஒரு மோட்டார் வாகனத்துக்கு ஐந்து ரி-56 துப்பாக்கிகளைப் புலிகள் வாங்குகிறார்கள் என்று ஒரு பொலிஸ் அதிகாரியை மேற்கோள்காட்டி இந்தச் செய்தி எழுதப்பட்டிருக்கிறது என்றேன்.

கொள்ளையடிக்கப்பட்ட பொருட்கள் புலிகள் பகுதியில் விற்கலாமென்பதுடன், நாட்டுக்குள் துப்பாக்கிகள் பெருகுவதற்குப் புலிகளே காரணமென்றும் இந்தச் செய்தி எடுத்துக் காட்டுகிறது. விடுதலைப் புலிகள் தங்கள் ஆயுதங்களைக் கொடுத்து, மோட்டார் வாகனங்களை வாங்குகிறார்களென்று பிரசாரமும் செய்யப்படுகிறது. இப்படியான செய்திகளைத் தனியார் ஊடகங் கள் இனவெறியை ஊட்டுவதற்காகக் கடந்த பல வருடங்களாகச் செய்து வருகின்றன என்றார் பரமசிவம்.

தனியார் ஊடகங்களும், அரச ஊடகங்களும் தங்கள் போக்கை மாற்றி, இன ஐக்கியத்தை வளர்க்காவிட்டாலும், மோசமாக்காமல் செயற்பட்டாலொழிய நாடு முன்னேறமுடியாது.

சிங்கள - தமிழ் புத்தாண்டிலிருந்தாவது ஊடகங்கள் தங்கள் நிலைப்பாட்டில் மாற்றம் செய்துகொள்ள வேண்டும். இதே துவேஷ மனப்பான்மை நீடிக்குமானால், நாட்டின் ஒற்றுமை என்பது கானல் நீராகவே இருக்குமென்றார் பரமசிவம்.

# வாசகர் நோக்கு...

## வீதி திருத்தப்படுமா?

*சுன்னாகம் பிரதேச சபைக்கு உட்பட்ட தாவடி உப்பு மடச் சந்தியில் இருந்து ஆரம்பிக்கும் கோண்டாவில் புகையிரத நிலைய வீதியில் நகர்பகுதி நீண்ட காலமாக திருத்தப்படாமல் குன்றும் குழியுமாக காணப்படுகிறது.*

*இவ்வீதியால் செல்வோர் பலத்த சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. குறிப்பாக கோண்டாவில் மகாவித்தியாலய மாணவர்கள் இவ்வீதியைப்பயன்படுத்துவதால் விபத்துகளை சந்திக்க வேண்டியுள்ளது.*

*இது தொடர்பாக பல்வேறு அமைப்புகளூடாக சம்பந்த பட்டவர்களுக்கு அறிவித்தல் கொடுத்தும் எந்தவிதமான பயனும் கிடைக்கவில்லையென அப்பகுதி மக்கள் விசனம் அடைந்துள்ளனர்.*

*இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் கூடிய கவனம் செலுத்தி இவ்வீதியை திருத்தி அமைத்து இப்பாதையால் பயணம் செய்வதை இலகுவாக்குவார்களா?*

# பார்த்திப புதுவருஷப் பிறப்பு சுபகருமம்

## வாக்கிய பஞ்சாங்கப்படி பழைய நேரம்

தாரண வருஷம் பங்குனிமாதம் 31 ஆம் நாள் (13.04.2005) புதன்கிழமை பூர்வபக்ஷ பஞ் சமித் திதியில், மிருகசீர்ஷ நட்சத்திர இரண்டாம் பாதத்தில் விருச்சிக லக்கினத்தில், முன்னிரவு 10 மணி 17 நிமிடத்தில் மங்களகரமான புதிய பார்த்திப வருஷம் பிறக்கிறது.

அன்று மாலை 06 மணி 17 நிமிடம் முதல் 02 மணி 17 நிமிடம் வரை விஷு புண்ணிய காலமாகும். இந்நப் புண்ணிய காலத்தில் யாவரும் மருத்துநீர் தேய்த்து சிரசில் கடப் பமிலையும், காலில் வேப்பமிலையும் வைத்து, ஸ்நானம்செய்து வெண்மை, சிவப்பு ஆடை யாயினும் அல்லது வெண்மை, சிவப்பு கரையமைந்த புத்தாடை அணிந்து, கண்ணாடி தீபம், பூர்ண கும்பம் முதலான மங்கலப் பொருட்களைத் தரிசித்து இஷ்ட குல தெய்வ வழிபாடாற்றி, இயன்றளவு தான தருமங்கள் செய்து பெற்றோர், குரு, பெரியோரை வணங்கி ஆசிபெற்று புதுவருஷத்தில் ஆற்றக் கூடிய நற்கருமங்களை சிந்தித்து மங்களகரமாகத் துயில் செய்க.

மறுநாளாகிய பார்த்திப வருஷம்சித்திரை மாதம் 01 ஆம் நாள் (14.04.2005) வியாழக் கிழமை அதிகாலையில் துயில் எழுந்து ஸ்நானம் செய்து மங்கலப்பொருட்களைத் தரிசித்து, சூரிய வழிபாடு, இஷ்ட குல தெய்வ வழிபாடாற்றி அறுசுவை உணவுஅருந்தி மங்களகரமாக வாழ்வீர்களாக.

### கை விசேஷம்

சித்திரை 02 ஆம்நாள் (15.04.2005) வெள்ளிக்கிழமை காலை 07.56 மணிமுதல் 09.47 மணிவரை. நண்பகல் 12 .10 மணி முதல் 02.05 மணி வரை.

சித்திரை 05 ஆம் நாள் (18.04.2005) திங்கட்கிழமை பகல் 12.27 மணிமுதல் 02.03 மணிவரை. இரவு 06.27 மணிமுதல் 07.39 மணிவரை.

### பெரியோர், குரு தரிசனம்

சித்திரை 02 ஆம் நாள் (15.04.2005) வெள்ளிக்கிழமை இரவு 06.27 மணிமுல் 08.04 மணிவரை.

சித்திரை 05 ஆம் நாள் (18.04.2005 ) திங்கட்கிழமை பகல் 12.27 மணிமுதல் 02.03 மணிவரை.

சித்திரை 09 ஆம் நாள் (22.04.2005 ) வெள்ளிக்கிழமை காலை 08.08 மணிமுதல் 09.19 மணிவரை.

### ஏர் மங்களம் வயல், தோட்டச் செய்கை

சித்திரை 02 ஆம் நாள் (15.04.2005 ) வெள்ளிக்கிழமை இரவு 07.07 மணிமுதல் 08.05 மணிவரை.

சித்திரை 09 ஆம் நாள் (22.04.2005 ) வெள்ளிக்கிழமை காலை 07.36 மணிமுதல் 09.12 மணிவரை.

### வியாபாரம்ஆரம்பிப்பதில் புதுக்கணக்கு பதிதல்

சித்திரை 02 ஆம் நாள் (15.04.2005 ) வெள்ளிக்கிழமை காலை 09.12 மணிமுதல் 09.47 மணிவரை. மாலை 06.18மணிமுதல் 07.02 மணிவரை

சித்திரை 09 ஆம் நாள் (22.04.2005 ) வெள்ளிக்கிழமை காலை 07.36 மணிமுதல் 09.12 மணிவரை.

### சங்கிரம தோஷ நட்சத்திரங்கள்

கார்த்திகை 2, 3 ,4 ஆம் பாதங்கள் ரோகினி, மிருகசீர்ஷம், சித்திரை, சுவாதி, விசாகம் 1, 2 ,3 ஆம் பாதங்கள் அவிட்டம். இவற்றில் பிறந்தோர் தவறாது மருத்துநீர் தேய்த்து ஸ்நானம் செய்து ,தான தரும வழிபாடு செய்து சங்கிரம தோஷ நிர்வர்த்தி செய்க.

சுபம்

## திருக்கணிதப் பஞ்சாங்கப்படி

தாரண வருடம் பங்குனி மாதம் 31 ஆம் திகதி புதன்கிழமை இரவு (13.04.2005) உதயாதி நாழிகை 45-13 மணி இரவு 12-39 இல் பார்த்திப என்னும் பெயருடைய புது வருஷம் பிறக்கிறது. அன்று நட்சத்திரம் மிருகசீரிடம் 2 ஆம் பாதம் வளர்பஞ்சமி திதி. இது 60 வருட சுற்று வட்டத்தில் 19 - ஆவது வருஷமாகும். அன்று இரவு (நாழிகை 35-13) மணி 8.39 தொடக்கம் பின்னிரவு (நாழிகை 55-13) மணி 4.39 வரையும் மேட சங்கிரமண புண்ணியகாலம் எனப்படும்.வருஷம் பிறக்கும் போது உதயலக்கினம் 'தனுசு' ஆகும்.

இந்தப் புண்ணிய காலத்தில் சகலரும் சங்கற்ப பூர்வமாக மருத்து நீர் தேய்த்து தலையில் வேப்பிலையும், காலில் கொன்றலிலையும் வைத்து ஸ்நானம் செய்து வெண் பச்சை நிறப்பட்டாயினும், அல்லது பச்சைக்கரை வைத்த வெள்ளைப் புது வஸ்திரமாயினும் தரித்து மரகதம் பதிக்கப்பெற்ற ஆபரணங்களையணிந்து, நித்திய கர்மானுஷ்டானம் முடித்து கண்ணாடி, தீபம், பூரண கும்பம் முதலிய மங்கலப் பொருட்களைத் தரிசித்து விநாயகர் முதலிய இஷ்ட குல தேவா ராதன தரிசனங்கள் செய்து பெரியோர், குரு, பெற்றோர் முதலியோலை வணங்கி அவர்கள் ஆசிபெற்று, மோதகம், வடை, வேப்பம்பூ முதலியவற்றுடன் அறுசுவைப் பதார்த்தங்களையும் போஜனஞ் செய்து புதுப் பஞ்சாங்கப் பலன்களைக் கேட்டு சயனிப்பராகளாக.

மறுநாள் வியாழக்கிழமை அதிகாலை எழுந்து முன்போல் ஸ்தானஞ் செய்து நித்திய கருமங்களை முடித்து கண்ணாடி, தீபம், பூரண கும்பம் முதலிய மங்கலப் பொருட்களைத் தரிசித்து, சூரியனுக்குப் பொங்கல் பூஜை வழிபாடுகள் செய்து, விருந்தினரை உபசரித்து பிதிர் விரதானுசாரிகள் சிராத்தம் ,தர்ப்பணம் என்பன செய்து, நண்பர்கள் விருந்தினர்களுடன் முன் போல் போஜனஞ் செய்து தாம்பூலமருந்தி சுகந்த சந்தன புஷ்பாதிகளை அணிந்து புது வருடத்தில் ஆற்றக் கூடிய நற்கருமங்களைச் சிந்தித்து மங்களகரமாக வாழ்வார்களாக.

### கை விசேஷம்

சித்திரை 02 ஆம்நாள் (15.04.2005) வெள்ளிக்கிழமை காலை 06.34 மணிமுதல் 07.22 மணிவரை. இரவு 6.58 மணி முதல் 8.34 மணி வரை.

சித்திரை 05 ஆம் நாள் (18.04.2005) திங்கட்கிழமை பகல் 12.57 மணிமுதல் 02.33 மணிவரை. இரவு 06.57 மணிமுதல் 08.09 மணிவரை.

### பெரியோர், குரு தரிசனம்

சித்திரை 02 ஆம் நாள் (15.04.2005) வெள்ளிக்கிழமை இரவு 06.58 மணிமுல் 08.304 மணிவரை.

சித்திரை 05 ஆம் நாள் (18.04.2005 ) திங்கட்கிழமை நண்பகல் 12.57 மணிமுதல் 02.33 மணிவரை.

### வியாபாரம்ஆரம்பிப்பதில் புதுக்கணக்கு பதிதல்

சித்திரை 02 ஆம் நாள் (15.04.2005 ) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.57 மணிமுதல் 2.23 மணிவரை. சித்திரை 09 ஆம் நாள் (22.04.2005 ) வெள்ளிக்கிழமை காலை 06.30 மணிமுதல் 7.42 மணிவரை.

### சங்கிரம தோஷ நட்சத்திரங்கள்

கார்த்திகை, ரோகினி, மிருகசீர்ஷம், சித்திரை, சுவாதி, விசாகம் அவிட்டம்.

சுபம்

---

**கல்வியியல்**

சோ.சி. சிவானந்தராஜா

# மாணவர்கள் மத்தியில் கற்றலுக்கு மட்டுமன்றி ஆற்றுகையாகவும் அமையும் அழகெழல் போட்டி

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களிடையே அழகியல் சார் போட்டிகளை நடத்தி, அழகியல் கலையில் மாணவர்களின் ஈடுபாட்டை அதிகரிக்கச் செய்யும் நோக்குடனே அழகியல் பாடம் கற்றலுக்கானதாக மட்டுமல்லாமல், ஆற்றுகைக்கானதாகவும் இருத்தல் வேண்டும் என்ற கொள்கைக்கு அமைவாக மாணவர்களின் கலை ஆற்றுகைகளுக்குக் களம் அமைத்துக் கொடுக்கும் வகையில், யாழ்ப்பாண தேசிய கல்வியற் கல்லூரி நடாத்திவரும் 'அழகெழல்' போட்டிகள் இந்த ஆண்டும் சிறப்பான முறையில் இடம் பெற்றன.

கடந்த ஆண்டுகளைப் போல இந்த ஆண்டும் சித்திரம், இசை, நடனம், நாடகம் ஆகிய துறைகளுக்கான போட்டிகள் கடந்த 25, 26 ஆம் திகதிகளில் கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றன.

இந்த ஆண்டுக்கான அழகெழல் போட்டிகள் யாழ்.மாவட்ட எல்லையைக் கடந்து, கிளிநொச்சி மண்ணில் முதன் முதலாக சித்திரத்துறை போட்டிகள் நடத்தப்பட்டன. பலமுறை போரைச் சந்தித்து மீண்டெழும் நகரான கிளிநொச்சி மத்திய கல்லூரியில் கடந்த 18 ஆம் திகதி மிகச் சிறப்பாக இந்தப் போட்டிகள் ஆம்பமாகின.

கிளிநொச்சி மாவட்டத்தில் 94 பாடசாலைகள் இருந்தும், குறைந்தளவு பாடசாலைகள் இந்தத் போட்டியில் பங்கு பற்றியபோதும் 200 இற்கு மேற்பட்ட போட்டியாளர்கள் பங்குபற்றினர்.

மாணவர்களுக்கான இந்தப் போட்டி நான்கு பிரிவாகவும், ஆசிரியருக்கான போட்டி ஒரு பிரிவாகவும் இடம் பெற்றன.

இந்த மாவட்டத்தைப் பொறுத்தளவில் - ஒரு சில பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகளில் சித்திர பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் இல்லை.

இதனால் படம் வரையும் ஆற்றலும், ஆர்வமுமுள்ள மாணவர்கள் நடன அல்லது சங்கீதம் கற்க வேண்டிய நிலையிலுள்ளனர்.

இந்த நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் நடத்தப்பட்ட இந்த அழகெழல் சித்திரப் போட்டிகளில் மிகுந்த ஆர்வத்துடன் மாணவர்கள் பங்கெடுத்தனர். பெற்றோர் கூட நீண்ட தூரத்திலிருந்து தமது பிள்ளைகளை அழைத்துவந்து, போட்டி முடியும் வரை காத்திருந்தனர்.

'இப்படி ஒரு போட்டி மூலம் எங்கட பிள்ளைகள் படம் கீறுவதைப் பார்க்க சந்தோசமாய் கிடக்கு...' என்று கூறிய ஒரு மாணவியின் தாய், தன் மகளுக்குச் சித்திரப்பாடத்தைக் கற்பிக்க பாடசாலையில் ஆசிரியர் இல்லை என்று கவலையுடன் தெரிவித்தார்.




*அனுசா*
*உயர்தரம், கலைப்பிரிவு*
*கிளிநொச்சி மத்தியகல்லூரி.*

எனக்குச் சிறுவயதிலிருந்தே சித்திரத்துறையில் நல்ல ஆர்வம். ஆனால், எமது பாடசாலையில் சித்திர ஆசிரியர்கள் இல்லை. இதனால் நான் உயர்தரம் வரையும் நடனத்துறையிலேயே கற்று வருகிறேன். இருந்தும் நான் வேறு இடங்களில் சித்திரத்தைக் கற்று வருகிறேன். இந்தப் போட்டியில் பங்கு பற்றுவதையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தப் போட்டிகள் எமக்கு உட்சாகத்தைத் தருகின்றது. இங்கு இவ்வளவு பேர் பங்கு கொள்வதைப் பார்க்கும் போது, சந்தோசமாக இருக்கிறது. இப்படியான போட்டிகள் எமக்கு நல்ல சந்தர்ப்பத்தை வழங்குகின்றன. மாணவர் மத்தியில் மறைந்துள்ள திறன் இன்று வெளிப்படச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தைத் தந்தமைக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

இவ்வாறான போட்டிகள் தொடர்ந்தும் விஸ்தரிக்கப்பட வேண்டும். இன்று தொடக்கம் இது தொடர வேண்டும்.



*த. குருகுலராஜா*
*வலயக்கல்விப் பணிப்பாளர்*
*கிளிநொச்சி .*

நாம் அழகை அணிகலனாக அணிந்து கொண்டவர்கள். எங்களது பெயர்களும் அழகியலுடனேயே அமைந்துள்ளது. எமக்கு உள்ளிருக்கும் அழகைத் தேவைக்கேற்ப வெளிப்படுத்துகிறோம். அந்த வகையில் கல்வியியல் கல்லூரியின் செயற்பாடு பாராட்டத்தக்கது. எமது மாவட்டத்திலும் அழகெழல் போட்டிகள் நடத்தப்படுவதை முன்னிட்டு பெருமகிழ்ச்சி அடைகிறோம். இந்த ஆண்டு சித்திரப் போட்டி மட்டுமே இடம் பெறுகிறது. வரும் ஆண்டுகளில் இது விஸ்தரிக்கப்பட வேண்டும். எமது மாவட்டத்தில் அழகியல் ஆசிரியர்கள் குறைவு. இந்த நிலையில் இவ்வாறான போட்டிகள் உந்துசக்தியாக அமையும்.



*சரவண முத்து சந்திரவதனி*
*ஆசிரியர் .*
*சிவநகர் அ. த. க. பாடசாலை.*

எமது மாவட்டத்தில் சித்திர ஆசிரியர்கள் இல்லை. அந்த வகையில் இந்த அழகெழலின் வரவானது சித்தரத் துறையில் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு ஒரு தூண்டலாக அமையும். எதிர் காலத்தில் சித்திரத்துறையில் வல்லவர்களை உருவாக்க இது தூண்டலாக அமைகிறது. எனவே இந்த அழகெழல்ப் போட்டியை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம்.

எமது பாடசாலையில் சித்திர ஆசிரியர்கள் இல்லை. இருந்தாலும் எமக்கு இந்தத் துறையில் உள்ள ஆர்வம் காரணமாக நான் சித்திரத்துறையைக் கற்பித்து வருகிறேன். 145 மாணவர்களில் 50 மாணவர்கள் சித்திரப் பாடத்தைக் கற்று வருகின்றனர். கடந்த வருடம் 7 மாணவர்கள் க.பொ.த (சா.த) பரீட்சையில் தோற்றி 5 மாணவர்கள் சிறப்புத் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

*தர்மகுலசிங்கம் பிரதாப்*
*தரம் -11*
*கிளிநொச்சி*
*மகாவித்தியாலயம்.*

எமது பாடசாலையில் சித்திர ஆசிரியர் இல்லை. இருந்தாலும் இந்த நிலையில் இங்கு இந்தப் போட்டியில் பங்கு கொள்வது மகிழ்ச்சியைத் தருகிறது. வேறு சித்திரப் போட்டிகள் நடந்தாலும், இது போல ஒரு இடத்தில் சினேகபூர்வமாகப் பலர் கலந்து கொண்டு போட்டியில் ஈடுபடுவது மகிழ்ச்சியைத் தருகிறது. இது போல இன்னும் பல போட்டிகள் இங்கு நடைபெற வேண்டும் என எதிர்பார்க்கிறோம்.

*அருள்மாஸ்ரர்*
*கல்விக் கழக*
*துணைப் பொறுப்பாளர்.*

ஆசிரியர்களை உருவாக்கப் பல நிறுவனங்கள் உண்டு. இருந்தாலும் உத்தமமான ஆசிரியர்களை உருவாக்குவது கல்வியியற் கல்லூரிகள் மட்டும் தான். இங்கு வந்த பத்து ஆசிரியர்களும் மாணவர்களுக்கு முன் மாதிரியாக உள்ளனர். அத்தோடு அழகெழல் போட்டியை நடத்தும் கல்வியியற் கல்லூரிக்கு எமது நன்றிகள். நாம் நிம்மதியாக வாழ வழிவகுத்த குருதி கலந்த இந்த மண்ணில் போட்டியில் பங்குபற்றும் மாணவர்களின் திறமை வெளிப்படும் வகையில், அவர்கள் போட்டிகளில் பங்கெடுக்க வேண்டும்.

*பா.தனபாலன்*
*உப பீடாதிபதி*
*தேசியக் கல்லூரி*
*யாழ்ப்பாணம்.*

எமது மண்ணில் அழகு எழ வேண்டும். இதனூடாக கல்வி எழுச்சி அடைய வேண்டும். இது ஒரு போட்டி மட்டுமல்ல; இது ஒரு பங்குபற்றல் நிகழ்வு. இதனூடாகப் புதிய கல்வி முறைமைக்கேற்ப மாணவரின் திறன்கள் மேம்படுத்தப்படுகிறது. அழகியற் கலைகள் கல்வியுடன் இறுகக் கலந்துள்ளன. கலைகள் ஊடாக மண்ணுக்கு ஏற்ற மனிதரை உருவாக்க முடியும். சமூகத்தை ,தேசத்தை தன்னை நேசிக்கத்தக்க ஒரு மனிதனை உருவாக்கலாம். இதனூடாக எமது தேசத்தைக் கட்டி எழுப்பலாம்.

*எஸ். சசிரதன்*
*உள்ளகப் பயிற்சி ஆசிரியர்*
*கிளி. மத்தியகல்லூரி.*

முதன் முதலாக கிளிநொச்சி மாவட்டத்தில் அழகெழல் சித்திரப் போட்டிகள் நடந்தப்படுவதையிட்டு மகிழ்ச்சி அடைகிறோம். மகிழ்வோடு வரவேற்கிறோம். இந்தப் போட்டிகளை இந்த ஆண்டு நாம் ஒழுங்கு செய்து, சித்திரப் போட்டிகளை மட்டும் நடத்துகிறோம். இனிவரும் ஆண்டுகளில் ஏனைய துறைகளிலும் இந்தப் போட்டிகள் நடத்தப்பட வேண்டும்.

# நிரந்தர நியமனம் பெற்றுள்ள 143 தொண்டராசிரியர்களின் விபரம்

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ளதமிழ்மொழி மூல அரசாங்கப் பாடசாலகளில் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தொண்டராசிரியர்களில் 143 பேருக்கு நிரந்தர நியமனம் வழுங்கப்பட்டுள்ளது. அவர்களின் விபரம் வருமாறு -

ஜுனைதா இப்றாகிப்லெவ்வை (..அல்-மதீனா வித்தியாலயம்), சித்திலததீபா காதர் முகையதீன் (அல் - ஹம்றூன் வித்தியாலயம்), து. நவினி (ஸ்ரீ. இராமக்கிருஸ்ண் கல்லூரி), ஜெமீலாபீவி இவ்றலெவ்வை (அல் - கஹாரா வித்தியாலயம்), சுதர்சினி தங்கவேல் (வெம்பு அ.த.க.பாடசாலை), ஏ. மர்சூக்கா (மஃமுத் பெண்கள் கல்லூரி),

காதர் முகைதீன் அப்துல் வஹாப் (அல் - ஹிதாயா வித்தியாலயம்), மீராமுகைதீன் அப்துல் சத்தார் (வீரத்தடல் அல் - ஹிதாயர மகாவித்தியாலயம்), தில்லையம்பலம் கலைநாதன் (கொடு வாமடு சத்தி வித்தியாலயம்), சிவபவானி அருணாச்சலம் (கோறங்கேணி திருமகள் வித்தியாலயம்), நாவினி நடராசா (இளையதம்பி இந்து வித்தியாலயம்),

சிவநேஸ்வரி சின்னத்தம்பி (விக்னேஸ்வரா வித்தியாலயம்), சூலையுமா லெவ்வை உம்முல் சார்ஜஹான் (அல் - அஸ்றக் மகாவித்தியாலயம்), சாய்வு சித்திமிஹிவான் (அல் - புமுறுன் வித்தியாலயம்), கவிதா பத்மதாஸ் (ஏழாலை புனித இசிதோர் றோ.க.த.க பாடசாலை), குமுதினி குணரட்ணம் (அராலி கிழக்கு அ.த.க. பாடசாலை), ஜான்சி மகாதேவன் (அளவெட்டி தெற்கு அ.மி.த.க. பாடசாலை), கார்த்தீகா அம்பலவாணர் (இளையதம்பி இந்து வித்தியாலயம்),

ஜனல் நன்ஸுறா ஆதம் (அல் - டிஸ்கர் பெண்கள் உயர்தர பாடசாலை), ஜெமிலா உம்மா முகம்மதுத்தம்பி (ஜமாலியா வித்தியாலயம்), சித்தி சபீனா முகமது முகையதீன் (மஹ்முத் மகளிர் கல்லூரி), கிருஷ்ணப்பிள்ளை பாஸ்கரன் (அன்னமலை ஸ்ரீ சக்தி வித்தியாலயம்), அகம்மதுலெவ்வை மாறுப் (ஜமாலியா வித்தியாலயம்), ஜயந்தி கணபதிப்பிள்ளை (மாவடி முன்மாதிரி அ.த.க. பாடசாலை), தில்லைநாதன் பிரமானந்தன் (சின்னவத்தை அ.த.க. பாடசாலை),

ஜேந்தினி வேலாப்போட்டி (விடுதிக்கல் அ.த.க பாடசாலை), சந்திரகலா மாமாங்கம் (மாவடி முன்மாரி அ.த.க பாடசாலை), வசந்தி சண்முகம் (கோறளங்கேரி திருமகள் வித்தியாலயம்), அப்துல்வகாப் ஜலாகதீன் (உப்பாறு அல்-ஹிதாயா வித்தியாலயம்), நிஸ்வாண முகைதீன் (குறிஞ்சாக்கேரி மகளிர் மகாவித்தியாலயம்), முகம்மது யூசூப் அப்துல் ரகீம் (வட்டுக்கச்சி முஸ்லிம் வித்தியாலயம்), ஜெயந்தி சக்திவேல் (எழுவதீவு முருகவேல் வித்தியலயம்), இசிதோர் தோமஸ் அல்வின் (நெடுந்தீவு சீக்கிரியாம்பள்ளம் அ.த. மகாவித்தியஜுலயம்),

ஜெயந்தி முத்துலிங்கம் (நாரந்தனை றோ.க.மகாவித்தியாலயம்), மேரிகார் மெலிற்றா இராசநாயகம் (நெடுந்தீவு மகாவித்தியாலயம்), யெனிற்றா சுதர்ஷினி ஜோசப் (நெடுந்தீவு மகாவித்தியாலயம்), அம்ல்டாநேவிஸ்மேரி சிங்கராயர் (நெடுந்தீவு றோ.க.பெ.வித்தியாலயம்), சிவசம்பு இராஜேஸ்வரன் (அனலைதீவு வடலூர் அ.மி.த.க.பாடசாலை), சுதாஜினி பரஞ்சோதி (அழியவளை றோ.க.த.க. பாடசாலை),

தயாளினி சின்னையா (ஆவரங்கால் மகாஜன வித்தியால யம்), முபீதா முகம்மதனியா (அல் அக்ஸா வித்தியாலயம்), நளாயினி கணபதிப்பிள்ளை (கோளாவில் பெருநாவலர் வித்தியாலயம்), ஹயாத்து முகம்மது அமானுல்லா (கேணிநகர் பதீனா வித்தியாலயம்), வதனி செல்வரத்தினம் (பண்ணாகம் வடக்கு அ.மி.த.க பாடசாலை), பௌகல்ஹினாயா முஹம்மது தம்பி (சம்மாந்துறை முஸ்லிம் மகளிர் வித்தியாலயம்), கோகிலா கோபால் (இன்பெக்ஸ்பஏத்தம் அ.த.க பாடசாலை),

ராஜிதா முஹம்மது அப்துல் மஜீது (அல் - அன்சத் மகாவித்தியாலம்), அகமட் லெவ்வை அப்துல் ஜலீல் (மத்தியமுகம் அ.மு.க.பாடசாலை), ஜெமீலா உம்மா அப்துல் மஜீத் (மத்தியமுகம் அ.மு.க பாடசாலை), சிவாசினி தம்பிராசா (மல்வத்தை விபுலானந்தா மகாவித்தியாலயம்), லவகுமாரி மாணிக்கம் நாவிதன்வெளி அண்ணாமலை வித்தியாலயம்), சாமித்தம்பி ருக்மாங்கதன் (நாவிதன்வெளி அண்ணாமலை மகாவித்தியாலயம்), சித்தி ஜாமிலா சலகுதீன் (பாலமுனை அல்-மின்ஹாஜ் வித்தியாலயம்), பரீனா உம்மா அப்துல் ஹமீது (அல் ஹுசைன் வித்தியாலயம்),

இராசரத்தினம் ஜெனால்ட் அன்ரனி (அனலைதீவு தெற்கு அ.த.க.பாடசாலை), முத்துலிங்கம் ஜெகசோதி (மண்டூர் 35 கண்ணன் வித்தியாலயம்), தயாழினி தர்மலிங்கம் (அராலி இந்துக்கல்லூரி), சிவாஜினி சுப்பிரமணியம் (அராலி இந்துக்கல்லூரி), மீராலெவ்வை முகம்மது சாஹிர் (அல் அர்சத் மகாவித்தியாலயம்), ஹமீட் றிஸ்வி (வரிப்பத்தாஞ்சேனை அல் அமீர் வித்தியாலயம்), சித்தி ஜஹீலா ஆதம்பாவா (அல் - ஹிலான் வித்தியாலயம்), மீரா முஹையதீன் அம்சார் (வீரத்திடல் விதாயா மகாவித்தியாலயம்), முஹம்மது புறா லெவ்வை முஹமது றோஜ் (அல் -பாத்மிய்யா வித்தியாலயம்),

கிருஸ்ஷாந்தி மகாலிங்கசிவம் (திருக்கோவில் குமரவித்தியாலயம்), சாந்தினி சபாநாயகம் (வீரச்சோலை அ.த.க பாடசாலை), தர்மலிங்கம் அன்பழகன் (எழுவதீவு முருகவேள் வித்தியாலயம்), ஜெயச்சித்திரா துரைசிங்கம் (நவாலி சென்பீற்றர்ஸ் றோ.க.த பாடசாலை), சாய்பு லெவ்வை பைரோசா (இறக்காமம் அல் - அஷ்ரப் மகாவித்தியாலயம்), உம்மு சாபிறா முஹமட்சாலி (இறக்காமம் அல் அமீல் வித்தியாலயம்), சக்கீனா அலியார் (அல் ஜலல் வித்தியாலயம்), முஹம்மது யூசுப் ரபீஸா (இறக்காமம் அல் அஷ்ரப் வித்தியாலயம்),

ஆ.லெ.ஜௌவ்ஸ் (அல் அஸ்ரப் மகாவித்தியாலயம்), அன்ரனிற்ரா ஜெயராணி ஆரோக்கிய நாதர் (கிளாலி றோ.க.த.க பாடசாலை), யூட்சியா ரஷ்மி பெலிகஸ் அல்போட் (அனலைதீவு சதாசிவம் வித்தியாலயம்), சுஜிதா கணபதிப்பிள்ளை (சோரன்பற்று கணேசா வித்தியாலயம்), ஜெகநிதி கந்தசுவாமி (ஸ்ரீ பஞ்ஞசிக வித்தியாலயம்), மேரி ஜென்சில்டா நிக்கிலஸ் (அனலைதீவு சதாசிவம் வித்தியாலயம்), கிருஸ்ஷாந்தி இராசநாயகம் (நெடுந்தீவு றோ.க. பெண்கள் பாடசாலை),

முருகுப் பிள்ளை நிமலதாசன் (துணுக்காய் அ.த.க பாடசாலை), மோகனலெட்சுமி மகேந்திரராசா (புதுக்குடியிருப்பு அ.த.க பாடசாலை), ஆசுரீன் பௌசுல்லா (பாத்திமா பாலிகா வித்தியாலயம்), செல்லத்துரை செந்தில் குமார் (ஹங்காங் கேணி அ.த.க பாடசாலை), நாகலிங்கம் தயாகரன் (கட்டுமுறிவுக்குளம் அ.த.க பாடசாலை) , சுமித்திரா நடராசா (மாதகல் சென்.தோமஸ் றோ.க.பெண்கள் பாடசாலை),

செற்சொரூபி தம்பிமுத்து (நாற்பது வெட்டை விபுலானந்த வித்தியாலயம்), அனீசியா கினி அழகையா (உன்னிச்சை 08 அ.த.க பாடசாலை), கலாஜினி மயில்வாகனம் (மண்டூர் 40 அ.த.க பாடசாலை), ஜெயந்தினி வேலுப்பிள்ளை (மண்டூர் 40 அ.த.க. பாடசாலை), நுஷ்ரத் பானுஹஷன் அந் - நஜாத் வித்தியாலயம்), சாஜிதா முஹமது ஜுசுப் (அல்-அஸ்தாப் வித்தியாலயம்), கிறிஸ்ரீன் மதிவதனி டேவிற் (அல் பாத்ஹா வித்தியாலயம்), துஷாஜினி நாராயணமூர்த்தி (அல் பாத்ஹா வித்தியாலயம்), சுவேந்திரா தெய்வநாயகம் (கொத்தியாபுலை கலைவாணி வித்தியாலயம்), ரஞ்சிதமலர் கதிரேசபிள்ளை (வந்தாறுமூலை கண்ணகி வித்தியாலயம்),

ஞானசிங்கம் ஜெயசீலன் (இருநூறுவில் அ.த.க பாடசாலை), அபமகரிகரீபா (அல்அஸ்கர் வித்தியாலயம்), கு.நளினிகாந்தி (திருவள்ளுவர் வித்தியாலயம்), தவதாசன் தவவானதி (அல்வாய் றோ.க.த.க பாடசாலை), ஜாஹிதா பீவி அஹம்மது முஹையதீன் (தாறும்உலும் வித்தியாலயம்), மேரி டொறீனா அன்ரனிப்பிள்ளை (பாசையூர் புனித அந்தோனியார் றோ.க. பெண்கள் பாடசாலை), நந்தினி பொன்னம்பலம் (பூநகர் திருவள்ளுவர் வித்தியாலயம்), யோகலட்சுமி ரத்தினம் (முல்லைத்தீவு மகாவித்தியாலயம்), தயாழினி வேலாயுதபிள்ளை (வற்றாப்பளை மகாவித்தியாலயம்), மங்களேஸ்வரி கிருஸ்ணசாமி (வள்ளுவர்புரம் பாரதி வித்தியாலயம்), அருளானந்தம் கிருபாமணிதேவி (புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம்), அந்தோனியாப்பிள்ளை யாகப்பு (தேவன்பிட்டி அ.த.க பாடசாலை), சின்னத்துரை ஆனந்தராஜ் (மூன்றாம் பிட்டி அ.த.க பாடசாலை), கிருஸ்ணபிள்ளை சுபாஸ் (கள்ளியடி அ.த.க பாடசாலை),

முருகுப்பிள்ளை நடராசா (இலுப்பக்கடவை அ.த.க பாட சாலை), இராசலிங்கம் சத்தியசீலன் (காக்காச்சி வெட்டை விஸ்ணு வித்தியாலயம்), வசந்தி சந்திரப்பிள்ளை (கண்ணகி வித்தியாலயம்), மாக்கிரேட் யோகினி தியாகராஜா (விநாயகபுரம் மகாவித்தியாலயம்), செய்யது முகம்மமு அனஸ் (கல்லரிச்சல் முஸ்லிம் வித்தியாலயம்), சுதேசினி மைக்கல் குரூஸ் (அம்பாறை தமிழ் வித்தியாலயம்), சுகுமாரன் இராஜகுமார் (கிரான் மகாவித்தியாலயம்),

நமசிவாயம் குணபாலசுந்தரம் (சீனன்வெளி ஆதவன் வித்தியாலயம்), கீதாஞ்சலி சண்முகவடிவேல் (ஸ்ரீசண்பகா மகாவித்தியாலயம்), கவிதா குணசே கரம் (மாவடிச்சேனை அ.த.க பாடசாலை), நவரட்ணம் கௌரிரூபி (ஸ்ரீசித்திவிநாயகர் அ.த.க பாடசாலை), காந்தகுமாரி பேரம்பலம் (வற்றாப்பளை மகாவித்தியாலயம்), மதிவதனி வேலுப்பிள்ளை (சுதந்திரபுரம் அ.த.க பாடசாலை), இந்திரவதனி இரத்தினசிங்கம் (உடையார் கட்டு மகாவித்தியாலயம்), இராஜவதனி தர்மலிங்கம் (சிலாவத்தை றோ.க.த.க பாடசாலை),

லீலாவதி சின்னத்தம்பி (பாண்டியன்குளம் மகாவித்தியாலயம்), செல்வராசா லதீசன் (பாண்டியன் குளம் மகாவித்தி யாலயம்), கிரிசாந்தி சின்னத்தம்பி (மன்னாகண்டல் அ.த.க பாடசாலை), ஜெயலலிதா கந் தையா (கன்னாவில் அ.த.க பாடசாலை), பாலசிங்கம் சதீஸ் (புரந்தன் இந்துமகாவித்தியாலயம்), ஜெயக்கொடி ஜெயதரன் (விநாயக புரம் நாச்சிக்குடா அ.த.க பாடசாலை), கோகிலவதனி அரியரத்தினம் (கிடாச்சூரி கருவேப்பங்குளம் அ.த.க பாடசாலை),

லிங்கேஸ்வரி மகாதேவன் (சின்னப்பூவரசன்குளம் விக்னேஸ்வரா மகாவித்தியாலயம்), திலகவதி குமரய்யா (நாம்பன்குளம் ஸ்ரீ முத்து மாரியம்மன் வித்தியாலயம்), சுபத்திரா கணபதிப்பிள்ளை (நயினா தீவு ஸ்ரீகணேசா வித்தியாலயம்), சூரியகலா குலசேகரம் (நெடுந்தீவு சைவப் பிரகாச வித்தியாலயம்), இஸ்மாலெவ்வை முஹம்மது அலிகான் (பாலமுனை மின்ஹாஜ் மகாவித்தியாலயம்), ஆபிதாவீதி அப்துல்காதர் (பொத்துவில் அல் - இஸ்பிராஜ் வித்தியாலயம்), ஹம்சுன் பௌசியா அபூபக்கர் (பொத்துவில் அல் - ஹுதா முஸ்லிம் வித்தியாலயம்), ஆரசரட்ணம் ஜெயசுதா (வீரச்சோலை அ.த.க பாடசாலை), சிவபவானி மார்க்கண்டு (கிரான் மகாவித்தியாலயம்), நடராசா நேமிநாதன் (முருத்தானை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்), ஜெயதீபா விசுவலிங்கம் (மணற்சேனை விவேகானந்தா வித்தயாலயம்), ஜெயா காசிபதி (கைவேலி கணேசா வித்தியாலயம்), விஜிதா இராசகுலசிங்கம் (சன்னாசி பரந்தன் செல்வவிநாயகர் வித்தியாலயம்)

# ஆப்கானில் நடந்த தாக்குதலில் 12 தலிபான் கிளர்ச்சிவாதிகள் பலி

ஆப்கானின் தென்பகுதியில் அமெரிக்க கூட்டணிப்படைகள் நடத்திய தாக்குதலில் 12 தலிபான் சந்தேக நபர்கள் கொல்லப்பட்டதாக ஆப்கான் அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆப்கானின் முன்னாள் இராணுவ அதிகாரியான ஜெனரல் கயால் பாஸ்சேசாய் தலைநகர் காபூலுக்கும் காடெஸ் என்ற பகுதிக்கும் இடையில் வீதியில் வாகனத்தில் சென்றுகொண்டிருந்தவேளை, தலிபான் கிளர்ச்சிவாதிகள் அந்த வாகனத்தின் மீது இரண்டு றொக்கட் தாக்குதலை நடத்தியதாகவும், இதனையடுத்து அமெரிக்க விமானங்களின் உதவி கோரப்பட்டு கிளர்ச்சிவாதிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதன்பின்னர் ஆப்கான் படைகள் கிளர்ச்சிவாதிகளை மலைப்பகுதி வரை விரட்டிச்சென்றதாகவும், பக்தியா மாகாண பாதுகாப்பு அதிகாரி குலாம் நபி சலீம் தெரிவித்தார். இவ்வாறு கிளர்ச்சிவாதிகளை விரட்டிச் சென்ற பின்னர் 12 தலிபான்களின் உடல்களை தாம் மீட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதல் நடைபெற்றதனை ஆப்கானிலுள்ள அமெரிக்கப் படையினர் உறுதிப்படுத்தியபோதும் சேதவிபரங்கள் தொடர்பாக எவற்றையும் தெரிவிக்கவில்லை.

எனினும் இந்தத் தாக்குதலில் தமது தரப்பில் ஒருவரே உயிரிழந்ததாக தலிபான் பேச்சாளர் முல்லா அப்துல் லத்தீப் ஹக்கீம் தெரிவித்தார்.

# பங்களாதேஷ் கட்டட இடிபாடு துரிதமாக இடம்பெறும் மீட்புபணிகள்



(சிட்டகொங்)

பங்களாதேஷில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 9 மாடிகளைக்கொண்ட ஆடைத் தொழிற்சாலைக் கட்டடம் இடிந்து வீழ்ந்ததில், அங்கு பணியாற்றிக்கொண்டிருந்த பணியாளர்கள் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளனர். இவ்வாறு சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணிகள் துரிதமாக இடம் பெற்று வருகின்றன.

கட்டட இடிபாடுகளிலிருந்து மீட்பு பணியாளர்களால் 28 உடல்கள் மீட்கப்பட்டுள்ளதுடன் காயமடைந்த 80 பேரும் மீட்கப்பட்டுள்ளனர். மேலும் 200 பேர்வரை கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

ஆடைத் தொழிற்சாலையிலுள்ள கொதிகலன்கள் வெடித்ததனாலேயே இந்த இடிபாடு ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தொழிற்சாலை இடிபாட்டிற்குட் பட்டவேளை ஏத்தனை பேர், தொழிற்சாலைக்குள் இருந்தனர் என்பது இதுவரை தெளிவாகத் தெரியவரவில்லை. மீட்பு பணியாளர்களுடன் இணைந்து தொழிற்சாலையில் இருந்தவர்களின் உறவினர்களும் மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற பங்களாதேஷ் பிரதமர் காலிதா ஷியா மீட்பு பணிகளை துரிதப்படுத்துமாறு அதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ளார்.

## இந்திய மத்தியபிரதேசத்தில்

# அணைக்கட்டு திறப்பினால் 55 இந்து பக்தர்கள் உயிரிழப்பு!



இந்தியாவின் மத்திய பிரதேசத்திலுள்ள அணைக்கட்டொன்றை அதிகாரிகள் திறந்துவிட்டதனால், இந்து மத கிரியைகளை நிறைவேற்றுவதற்காக ஆற்றின் கரையில் படுத்திருந்த இந்து பக்தர்களில் 54 பேர் உயிரிழந்ததுடன் 10 பேர் வரை காணாமற்போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் மூன்று இலட்சம் இந்து பக்தர்கள் ஆற்றங்கரையில் பிரார்த்தனைக்காக ஒன்று கூடியிருந்தவேளை, ஆற்றின் நீர்மட்டம் சடுதியாக உயர்ந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.


தாம் அணைக்கட்டை திறந்துவிட்டது உண்மையெனவும், ஆனால் இந்தப் பிரார்த்தனையில் பக்தர்கள் ஈடுபடுவது குறித்து தமக்கு எவ்வித தகவலும் தெரிவிக்கப்படவில்லையெனவும் அணைக்கட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனினும் இந்தச் சம்பவத்தில் 100 பேர் வரை காணாமற்போயுள்ளதாக மற்றொரு தகவல் தெரிவித்தது. இந்த அணைக்கட்டில் அள்ளுண்டு போனவர்களில் பெருமளவானோர் ஆற்றங்கரை மீட்பு பணியாளர்களால் மீட்கப் பட்டனர்.

அணைக்கட்டு திறக்கப்பட்டவேளை பெருமளவான பக்தர்கள் உறங்கிக் கொண்டிருந்ததாகவும், இதனாலேயே இந்த அனர்த்தம் நிகழ்ந்ததாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

உலக நோக்கு

# அமெரிக்க ஒப்பந்தகாரர் ஈராக்கில் கடத்தப்பட்டார்



ஈராக்கில் கட்டட ஒப்பந்தப் பணிகளில் ஈடுபட்டிருந்த அமெரிக்கர் ஒருவர் கடத்தப்பட்டுள்ளதாக ஈராக்கிலுள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் இவர் கட்டட புனரமைப்பு பணியில் ஈடுபட்டிருந்தவேளை நேற்று முன்தினம் திங்கட்கிழமை கடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவரைக் கடத்தியவர்கள் எவரும் தூதரகத்துடன் எவ்வித தொடர்பையும் ஏற்படுத்தவில்லையென அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன் எந்தக் குழுவினர் இந்தக் கடத்தலில் சம்பந்தப்பட்டுள்ளனர் என்பதற்கும், எவ்வித குழுவும் உரிமை கோரவில்லையெனவும், கடத்தப்பட்டவரை கண்டுபிடிக்குமாறு ஈராக்கிய அதிகாரிகளிடம் தாம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, அமெரிக்க பாதுகாப்பு செயலர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் ஈராக்கிற்கு விஜயமொன்றை மேற்கொண்டு அந்த நாட்டில் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் பேச்சுவார்த்தையை நடாத்தியுள்ளார்.

# பிரிட்டிஷ் நாடாளுமன்றத் தேர்தலில் ரொனி பிளேயருக்கு வெற்றிவாய்ப்பு



இங்கிலாந்தில் அடுத்த மாதம் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தற்போதைய பிரதமரான ரொனிபிளேயருக்கே வெற்றி வாய்ப்பு அதிகமுள்ளதாக அங்கு நடத்தப்பட்ட கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

தொழிலாளர் கட்சியைச் சேர்ந்தவர் பிரதமர் ரொனிபிளேயர். இவர் அடுத்த மாதம் 05 ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலிலும் தொழிலாளர்கட்சி சார்பாக போட்டியிடுகின்றார். இந்த நிலையில் அங்கு நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பில் தொழிலாளர் கட்சிக்கு 38 சதவீதமும் கொன்சவேட்டிவ் கட்சிக்கு 32 சதவீதமும் லிபரல் டெமாரட்ஸ் கட்சிக்கு 21 சதவீதமும் மக்கள் ஆதரவு அளித்துள்ளனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## அரசின் அடக்கு...

இதனால் மக்கள் பட்டினியை எதிர் கொள்ள நேரிடுகின்றது. எனவே இயல்பு வாழ்க்கை தோற்றுவிக்கும் வரை அந்த மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

போராளிகள் மீதும், பொதுமக்கள் மீதும் ஏற்படுத்தப்படும் மறைமுக அராஜக செயல்கள் உடன் நிறுத்தப் பட வேண்டும் போன்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டன.

இந்த மாபெரும் கண்டனப் பேர ணியில் வர்த்தக சங்கத்தின் பிரதி நிதி கள், மாதர் சங்கத்தினர். கடற் தொழி லாளர் சங்க சமாதானப் பிரதி நிதிகள், பொதுமக்கள் என ஆயிரக்கணக்கா னோர் கலந்து கொண்டனர்.

## விடுதலைப் புலிகளிடம்...

லும், விடுதலைப்புலிகளின் அண்மைக்கால செயற்பாடுகளை உன்னிப்பாக அவதானிக்கும் போது பல சந்தேகங்கள் எழுகின்றன. எனி னும், எத்தகைய அவசர நிலைமை யையும் எதிர்கொள்ளும் வகையில் பல[illegible] நாம் தயார் நிலையில் [illegible].

மட்டக்[illegible]பு, திருமலை, அம் [illegible]றை ஆகிய மாவட்டங்களில் கூடுத லான படையினர் சேவையிலீடு படுத்தப்பட்டுள்ளனர். இதன் மூலம் இந்தப்பகுதிகளில் இடம்பெற்றுவரும் வன்முறைச்சம்பவங்களைக் கட்டுப் படுத்த முடிகின்றது.

இந்த மாவட்டங்களில் புதிதாக இராணுவ சோதனைச்சாவடிகள், வீதித் தடைகள் அமைக்கப்பட்டுள் ளன. திடீர் சோதனைகளும் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. வடக்கு - கிழக்கு பிரதேசங்கள் உட்பட நாட் டின் சகல பகுதிகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. படையினர் எந்த நேரமும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## தமிழ்த் தேசியத்தைப் புலிகள்...

அடைந்து விட்டார்கள்.

சுனாமி அனர்த்தத்துக்கு பிறகு புலிகளின் தேசத்தை சர்வதேச அரசு களும் ஓரளவுக்கு அங்கீகரித்துவிட் டன. புலிகளை சேர்க்காமல் நிவார ணப் பணி என்றால் காசு கொடுக்க மாட்டோம் என்று பல நாடுகள் அறி வித்துள்ளன. இது புலிகளுக்குப் புத்து ணர்ச்சியைக் கொடுத்துள்ளது.

சுனாமி ஏற்பட்ட 20 நிமிடங் களுக்குள் ஈழப்பகுதியின் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நிவாரண வேலைகளில் ஈடுபட்டது. இதிலிருந்து புலிகள் வெறும் பயங்கரவாத அமைப் பல்ல மக்கள் நலனை முன்வைக்கும் முழுமையான அரசமைப்பு என்று புலனாகிறது.

ஈழத்தில் நடைபெறும் நீதிமன் றம்- 1993 ஆம் ஆண்டு புலிகளால் ஆரம்பிக்கப்பட்டது. அது இப்பொழுது முழுதானதோர் அமைப்பாக விளங் குகிறது. சிவில் கிரிமினல் வழக்கு களை விசாரிக்கும் நீதிமன்றங்கள் இந்திய நீதிமன்ற முறைப்படி நடக் கின்றன. கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இரு இடங்களில் உயர் நீதி மன்றங்கள் உள்ளன.

முழுமையான உள்நாட்டு காவல் துறை, குடிவரவுத்துறை, ஈழப்பகுதிக் குச் செல்பவர்களுக்கு தனியாக அனு மதிவழங்கி, அது அங்கு பரிசோதிக் கப்படுகிறது. ஈழத்திலிருந்து இலங்கை அரசுப் பகுதிகளுக்குச் செல்வதும், வருவதும் கண்காணிக்கப்படுகிறது என்றும் அதில் மேலும் தெரிவிக்கப்ப டுகிறது.

## புலனாய்வுச் சேவை கட்ட....

துறையை உள்நாட்டிலும் வெளி நாடுகளிலும் திறமையாகச் செயற் படுத்த முடிந்த நிலையில் - இலங் கையின் புலனாய்வுச் சேவை தனித் தனியாகச் செயற்பட்ட அதனை நிறை வேற்ற முடியாத நிலையில் இருப்பதா கக் கருதப்படுகிறது.

சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரிகளின் தகவல்களின் அடிப்படையில் இலங்கை யின் புலனாய்வுத் தரப்பில் ஒத்துழைப் புக்கள் அரிதாகவே காணப்படுகின்றன.

பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மில்லியன் கணக்கான பணத்தைக் கொண்டு வெளிநாட்டு புலனாய்வுச் சேவைக்கு நிதி செலவிடப்படுகிறது.

எனினும், தமிழீழ விடுதலைப் புலிகள் - வெளிநாடுகளில் காத்திரமான இரகசிய மார்க்கங்களைக் கைக் கொண்டு, நிதி சேகரிப்பிலும் ஆயுதக் கொள்வனவிலும் ஈடுபடுகின்றனர்.

1971 ஆம் ஆண்டு ஜே.வி.பியின் கிளர்ச்சியின் பின்னரே இலங்கை யின் புலனாய்வுச் சேவை உள் நாட்டு மட்டத்திலும் வெளிநாட்டு மட் டத்திலும் வளர்ச்சிக்குக் கொண்டுசெல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

1988 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கை புலனாய்வுச்சேவையை வெளிநாட்டு புலனாய்வுச் சேவையுடன் இணைக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் பிரெஞ் முறையில் தமது புலனாய்வுச் சேவையை விரிவாக்கிய நிலையில் - இதற்கான தேவை இலங்கையின் புலனாய்வுப் பிரிவுக்கு ஏற்பட்டது.

எனவே, உள்நாட்டு புலனாய்வுச் சேவையும் வெளிநாட்டு புலனாய்வுச் சேவையும் தனித்தனியே இயங்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

எனினும், அது தமிழீழ விடுத லைப் புலிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் அளவுக்கு செல்வாக் குச் செலுத்தவில்லை.

மறுபுறத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் புலனாய்வுச்சேவை பாரிய வளர்ச்சியைப் பெற்றுள்ளது.

இதேவேளை - தற்சமயம் நாட் டில் யுத்தம் ஒன்று இடம்பெறாத நிலையில் இலங்கையின் புலனாய் வுச்சேவையை புனரமைக்க முடியும் என்ற போதிலும், தேசிய பாதுகாப்புத் தொடர்பாக சரியான திட்டங்கள் எது வும் இல்லையென பாதுகாப்புத் துறை தரப்புக்கள் தெரிவித்தன.

எனவே, புலனாய்வுப் பிரிவின் பலவீனம் காரணமாக - யுத்தம் ஒன்று ஏற்பட்டால் அதனை எதிர்கொள்வதில் இராணுவத்துக்கு சிரமம் ஏற்படுமென படைத்தரப்பு கருத்து வெளியிட்டுள்ளது.

## அமெரிக்க....

நேற்றுமுன்தினம் கொழும்பு வந்த இவர் நேற்று யாழ். குடாநாடு உள் ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளுக் கும் விஜயம் செய்த பின்னர் இங் கிருந்து புறப்பட்டுச் செல்வார்.

A/L - 2007
புதிய பிரிவு
(கலை, வர்த்தகம்)
ஆரம்பம் : 16.04.2005 (சனி) காலை 9 மணி

| | | | |
|---|---|---|---|
| கணக்கீடு | - D.Sam | இந்து நாகரிகம் | - ஜோதீஸ்வரன் |
| வணிகக்கல்வி | - பசில் | அளவையியல் | - மோகன் |
| பொருளியல் | - இராஜேஸ்வரன் | புவியியல் | - இக்னேசியஸ் |
| ஆங்கிலம் | - சுதர்சன் | நாடகம் | - சந்திரன் |
| பொது வினா | - தவசேகர் | கிறிஸ்தவம் | - மல்லிகா |
| தமிழ் | - மீரா | | |

DMI யாழ். நகர்

### யாழ். மாவட்டத்தில்

# பட்டதாரி பயிலுநர்களாக மேலும் 22 பேர் நியமனம்!

(கொழும்பு)

அரசாங்க சேவையில் தகுதியான பதவிகளுக்கு ஆட்சேர்ப்புக்காக விண் ணப்பித்து - முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் பயிற்சி நெறிகளில் இணைத்துக்கொள்ளப்படாத - பத்தி ரிகை அறிவித்தலின்படி 28.02. 2005 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் மேன்முறையீடு கள் சமர்ப் பித்துள்ள வேலையற்ற பட்டதாரி களில், பயிற்சிக்காகத் தெரிவுசெய்யப் பட்ட பட்டதாரிகளின் பெயர் விபரங் களை நிதித் திட்டமிடல் அமைச்சின் முகாமைத்துவ சேவைகள் திணைக் களம் வெளியிட்டுள்ளது.

இவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்ப தாரிகள் - பயிற்சிக்காக சேர்த்துக்கொள்ளப்படுதல் தொடர் பான அறிவிப்புக்கள், தனித் தனியாக ஒவ்வொரு விண்ணப்பதாரிக்கும் அனுப்பிவைக் கப்படும்.

வெளியிடப்பட்ட விண்ணப்பதாரி களில் யாழ். குடாநாட்டைச் சேர்ந்த வர்களின் பெயர் விபரம் வருமாறு -

ஏ.பிரசாந்தி (தும்பளை - பருத் தித்துறை), எஸ்.செந்தூரன் (அல் வாய் மேற்கு), வி.சிவகுமார் (இணு வில் மேற்கு), கே.முரளி (மீசாலை), எல். சிவசுந்தரம் (நல்லூர்), எஸ். சிறிபிரிந்திரன் (உடுவில்),எஸ்.செல் வக்கருன்கோ (புலோலி வட கிழக்கு), பி.உமாசங்கர் (திருநெல்வேலி), எஸ். கஜன் (மானிப்பாய்), ரி. யோகேஸ்வரன் (கோப்பாய் வடக்கு), எஸ்.கேதீஸ்வரன் (கோப்பாய்), ஆர்.இரட்ணசிங்கம் (நாவலர் வீதி - யாழ்ப்பாணம்), டபிள்யு.புனித ராணி (உடுவில் வீதி, மானிப்பாய்), எஸ்.யோகேஸ்வரன் (புன்னாலைக் கட்டுவன்), கே.சந்திரகுமார் (சங் கத்தானை - சாவகச்சேரி), ஆர். விஜயதீபன் (2 ஆம் வட்டாரம் - வேலணை), ஆர்.சாந்தகுமார் (மானாங்கானை - வல்வெட்டித் துறை), ரி.சிவனேசராஜா ( புத்தூர் மேற்கு), கே.சுப்பிரமணியம் (புலோலி தெற்கு), எஸ்.சுதாகர் (வேம்படி வீதி - வல்வெட்டித்துறை), பி.கோகுலன் (தம்பசிட்டி - பருத்தித்துறை), எஸ். சியாமளா (புலோலி தெற்கு).

## தென்னாபிரிக்க அரசியல் .....

முன்னைய அரசோடு தமிழ் மக் கள் சார்பாக ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாட்டுக்கு அமைய, விடு தலைப்புலிகள் அரசுக்குச் சமர்ப்பித்த தன்னாட்சி அதிகாரசபை யோசனை களின் அடிப்படையில் அரசோடு பேச்சுவார்த்தைகளை மீளத் தொடங்க விடுதலைப்புலிகள் எப்போதும் தயா ராக இருக்கின்றனர்.

முன்னைய அரசு அமைதிப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிக்க இருந்த நேரத்தில், நாடாளுமன்றம் கலைக்கப் பட்டது. இது மிகவும் துர திஷ்டவசமானது. போர்நிறுத்த ஒப் பந்தம், இலங்கை போர் நிறுத்த கண் காணிப்புக்குழு மற்றும் நோர்வேயின் அனுசரணை ஆகியன தொடர்பாக முற்றிலும் முரண்பட்ட கொள்கை யைக் கொண்டுள்ள ஒரு கட்சியோடு சிறுபான்மை அரசு கூட்டணி அமைத் துக் கொண்டதால் நாட்டின் அரசியல் சூழ்நிலை அடியோடு மாறியது.

இப்படியானதொரு அரசியல் சூழ் நிலை - அரசு தனக்குள் ஒரு கருத் தொருமைப்பாட்டைக் காண்பதற்கு உகந்ததாக இல்லை. இதுவே அமை திப் பேச்சுவார்த்தையில் தற்போது காணப்படும் தேக்க நிலைக்குக் கார ணமாகும். போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதை அடுத்து இரண்டு தசாப்தமாக போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களது இடர் பாடுகள் களையப்படும் என எதிர் பார்க்கப்பட்டது.

துரதிஷ்டவசமாக அல்லல்பட்டு மக்களின் வாழ்வில் இயல்புநிலையை மீண்டும் கொண்டுவருவதற்கான ஒப்பந்த விதிகளை சரியாக நடை முறைப்படுத்துவதற்கு ஆட்சியில் உள்ள அரசு தவறிவிட்டது.

யுத்தத்தினால் 80,000 மக்கள் உயிரிழந்துள்ளார்கள். பத்து இலட் சம் மக்கள் உலகின் நாலா பகுதிக ளிலும் அகதிகளாக சிதறுண்டு போயு ள்ளார்கள். ஐந்து இலட்சம் மக்கள் தொடர்ந்தும் அகதி முகாம்களிலும், நலன்புரி நிலையங்களிலும் வாழ்க் கையை நடத்துகிறார்கள்.

உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர் வையில் தமிழ் மக்கள் தங்கள் சொந்த வீடு வாசல்களுக்கு மீள்குடி யேற அரசு அனுமதி மறுக்கிறது. தமிழ் மக்கள் தொடர்ந்து துன்பங் களை அனுபவிக்கிறார்கள். சுதந்தி ரத்துக்குப்பின்னர் அடுத்தடுத்து நாட்டை ஆண்ட அரசுகளினால் இழைக்கப்பட்ட அல்லல்கள், கசப் பான அனுபவங்கள் வரலாற்றின் மறக்கப்பட்ட பக்கங்களுக்குள் சேர்த் துக் கொள்ளப்படவுள்ளது.

இப்போது மனிதனால் உருவாக் கப்பட்ட துன்பங்கள், துயரங்கள் போதாதென்று சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களினாலும் தமிழ் மக்கள் பாதிப்புக்குள்ளாக்கப் பட்டுள்ளனர் என்று மேலும் தெரி வித்தார்.

விடுதலைப்புலிகளின் அரசியல் விவகாரக்குழுவினர், குவாசூலு நட் டால் பிரதமர், நாடாளுமன்ற உறுப்பி னர் மைக்கேல் மாபுயக்கு மற்றும் தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸ் பிரமுகர்களையும் சந்தித்துப் பேசினர்.

இதேவேளை, தமிழீழ அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தென்னாபிரிக்கப் போராட் டத்தில் பங்குகொண்ட நோபல் பரி சாளரான பேராயர் டெஸ்மன் டுட் டுவை நேற்றுச் சந்தித்துக் கலந்துரை யாடினார்.

நேற்று பிற்பகல் 5.30 மணியள வில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

தென்னாபிரிக்காவின் கறுப்பின போராட்டத்தில் முக்கிய பங்கை வகித் தவர்களில் ஒருவரான பேராயர் டெஸ் மன் டுட்டு சமாதனத்துக்கான நோபல் பரிசு பெற்றவர்.

அவரைச் சந்தித்த தமிழீழ அரசி யற் துறைப்பொறுப்பாளர், தமிழீழ விடுதலைப் போராட்டம், அதன் தற் போதைய நிலைமை, தற்போதுள்ள சமாதானச் சூழல், சுனாமி அழிவு, அதன் மீளமைப்புக்கான பொதுக் கட்டமைப்பு உருவாக்கம் உள்ளிட்ட விடயங்கள் குறித்து விளக்கமளித் தார்.

தென்னாபிரிக்க தேசியத்தலை வர் நெல்சன் மண்டேலா மொசாம் பிக் சென்றுள்ளதால் அவருடன் சந் திப்பு நடை பெறவில்லை.

இந்தச் சந்திப்பை முடித்துக் கொண்டு தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளரும், குழுவினரும், வத் திக்கானுக்கு பயணத்தை மேற்கொண் டுள்ளனர்.

## கிளிநொச்சி....

இடம்பெற்றது.

கிளிநொச்சியில் நடைபெற்ற பேரணி முற்பகல் 10.30 மணிக்கு இரு முனைகளிலிருந்து ஆரம்பமா கின. பண்பாட்டு மண்டபம் முன்பாக ஒரு பேரணியும், கந்தசுவாமி கோவில் முன்பாக மற்றொரு பேரணி யும் ஆரம்பமாகி, கிளிநொச்சி மாவட்ட செயலகத்தைச் சென்றடைந்தன. அங்கு அரச அதிபரிடம் மகஜர் கைய ளிக்கப்பட்டது.

D.C.M.
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(ஆனைப்பந்தி - இந்து குருகுலம் முன்பாக)
A/L - 2007 பிரிவு 02
கலை வர்த்தகம்
ஆரம்பம் : 16 ஏப்ரல் 2005 - சனி
கலை - காலை 7.00 மணி
வர்த்தகம் - காலை 11.00 மணி

| | |
|---|---|
| பொருளியல் | - வரதராஜன் |
| கணக்கீடு | - பாலவாசன் |
| வணிகக்கல்வி | - உமாகாந்த் |
| தமிழ் | - தமிழீந்திரன் |
| இந்துநாகரீகம் | - ஸ்ரீஸ் |
| அளவையியல் | - சுதன் |
| புவியியல் | - குமரன் |
| ஆங்கிலம் | - நிஷாந்தன் |

குறிப்பு : 01. சகல பாடங்களும் ஆரம்ப அலகிலிருந்து கற்பிக்கப்படும்.
02. பிரிவு 01 ற்கு மேலதிக அனுமதி வழங்கப்பட மாட்டாது.
D.C.M. இயக்குநர் S. வரதராஜன்

## மரண அறிவித்தல்



### திருமதி செல்லம்மா கந்தசாமி

உடுப்பிட்டி இமையாணனைப் பிறப் பிடமாகவும் நீர்வேலி வடக்கை வசிப்பி டமாகவும் கொண்ட செல்லம்மா கந்த சாமி அவர்கள் 11.04.2005 (திங்கட் கிழமை) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமியின் (பத்தர்) அன்பு மனைவியும், இராசமுத்து (அமரர்) இராசம்மா, அம்பிகா பதி (அமரர்),சிவசுப்பிரமணியம் (அமரர்) ஆகி யோரின் அன்புச் சகோதரியும், ஞானாமிர்தம், அமிர்தலிங்கம், லோகேஸ்வரி, சண்முகலிங்கம் ஆகியோரின் பாசமிகு தாயாரும் யோகராஜா, புஸ்பராணி, சோம லிங்கம், சாந்தா ஆகியோரின் அன்பு மாமியாரும், கமலேந்திரன், ரசீந்திரா, குமரேந்திரன், விஜயேந்திரன், நிரஞ்சினி, தாட்சாயினி, கஜேந்திரன், சிவாஜினி (அமரர்), மோகனரூபி, ஜெயதேவி, சுலக்ஷனா, மோகனேந்திரன், கேசவன், யுவேதினி ஆகியோ ரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.04.2005) புதன்கிழமை நீர்வேலியிலுள்ள அவரது இல்லத்தில் 4 மணி யளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

தகவல் :
க.அமிர்தலிங்கம் பத்தர் (மகன்)
சு.யோகராஜா பத்தர் (மருமகன்)
மு.சோமலிங்கம் (மருமகன்)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 13.04.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உ/த) பரீட்சை - 2005

# பொருளியல்

ஆசிரியர் : இ.இராஜேஸ்வரன்
(B.Com., Dip-in-Edu)
Jaffna Central College

க.பொ.த உயர்தரப் பரீட்சைக்காகத் தம்மைத் தயார்படுத்திக் கொண்டிருக்கும் மாணவர்கள் இலகுவாகச் சிறந்த பெறுபேறுகளைப் பெற வசதியாக இத் தொடர் வெளிவருகின்றது. தவறாது இத் தொடரைப் பின்பற்றி பயிற்சி பெறுவதன் மூலம் உங்கள் இலக்கை அடைய முடியும்.

*(தொடர்ச்சி)*

முதலாளித்துவப் பொருளாதாரம்

1. கட்டில்லாச் சந்தைப் பொருளாதாரமொன்றின் பிரதான இயல்புகள் யாவை?
2. முதலாளித்துவத்தின் பிரதான மறைகரத்தினை விளக்குக.
3. முதலாளித்துவத்தில் விலைப் பொறிமுறை எவ்வழிகளில் உற்பத்திச் சாதனங்களை ஒதுக்கீடு செய்கின்றது.
4. சந்தைப் பொருளாதாரத்தில் ஏன் நுகர்வோன் இறைமையுடையவனாவான் எனப்படுகின்றது?
5. முதலாளித்துவத்தில் எந்தநிலைமைகளின் கீழ் அரசு தலையிடுகின்றது.
6. விலை முறைமையின் தொழிற்பாட்டில் அரசு தலையிட எத்தகைய கருவிகளைப் பயன்படுத்தும்?

◆ பொருட்கள் –

1. இலவசப் பொருட்களை பொருளாதாரப் பொருளிலிருந்து வேறுபடுத்துக.
2. இலவசப் பொருட்களின் இயல்புகளைத் தருக.
3. இலவசப் பொருட்கள் எல்லையற்ற நிரம்பலை உடையவை ஏற்கலாமா விளக்குக?
4. இலவசப் பண்டத்துக்கும் பொருளாதாரப் பண்டத்துக்குமான ஒற்றுமை யாது?
5. இலவசப் பொருட்கள் எப்போதும் இலவசப் பொருட்களாகவே காணப்படும் என்பதை ஏற்பீரா? விளக்குக.
6. பின்வரும் பொருட்களை இனம் கண்டு விளக்கம் தருக?

i) புலமைப் பரிசில் கொடுப்பனவு
ii) குழாய் நீர்
iii) இலவச சீருடை
iv) நிலா ஒளி
v) மிளகாய் பதப்படுத்தப்படும் சூரிய ஒளி
vi) இலவச நிவாரண அரிசி
vii) பல்கலைக்கழக பட்டச்சான்றிதழ்
viii) பயனற்ற, கைவிடப்பட்ட குளிர்சாதனப் பெட்டி

**வரைபட ரீதியான வினாக்கள்**

1. உற்பத்தி சாத்திய வளையியை வரைவதில் எத்தகைய எடுகோள்கள் பயன்படும்.
2. உற்பத்தி சாத்திய வளையி என்றால் என்ன?
3. உற்பத்தி சாத்திய வளையி ஏன் மேலிருந்து கீழாகச் சாய்ந்து செல்கின்றது?
4. உற்பத்தி சாத்திய புள்ளி ஒன்று எதனைக் குறிக்கின்றது?
5. உற்பத்தி சாத்தியப் வளையி எச்சந்தர்ப்பங்களில் வலது புறம் நகரும்?
6. உற்பத்தி சாத்திய எல்லையின் வடிவத்தை எக்காரணிகள் தீர்மானிக்கின்றன?
7. பின்வரும் விடயங்களை எவ்வாறு உற்பத்திசாத்திய வளையில் காட்டுவீர்?

(இவ் வினா வகை அதிகளவு முக்கியத்துவம் கொண்டது)

i) வேலை வாய்ப்பில் கணிசமான வீழ்ச்சி
ii) குறைந்து செல்லும் எல்லை விளைவு விதியின் பின் எல்லை வினைதிறன் அதிகரிப்பு
iii) ஒரு கைத்தொழிலின் வினைத்திறனை உயர்த்தி, மற்றைய கைத்தொழிலின் வினைத்திறன் உயராத நிலை
iv) இரு பண்ட உற்பத்தியிலும் சமவிகித உள்ளீடுகள் பயன்படல்?
v) முகாமையில் முன்னேற்றம் காரணமாக ஒரு பண்ட உற்பத்தியில் உற்பத்தித்திறன் அதிகரிப்பு
vi) உற்பத்தியின் போது எல்லை வினைதிறன் குறைதல்
vii) அமையச் செலவு இன்றி இரு பண்ட உற்பத்தி அதிகரிப்பு
viii) வரட்சி ஒன்றின் விளைவாக விவசாய உற்பத்தி வீழ்ச்சி
ix) சக்தி நெருக்கடி காரணமாக மின் வளங்கள் குறைக்கப்படல்
x) அரச முயற்சிகள் தனியார் மயமாக்கலும் , வெளியீடு அதிகரிப்பும்
xi) இரண்டு கைத்தொழிலும், தொழிலாளரின் வினைத்திறனை விருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படல்
xii) இரசாயனத் தொழிற்சாலை ஊழியர்கள் வேலை நிறுத்தமும் உற்பத்தி வீழ்ச்சியும்
xiii) ஆடை உற்பத்திக்கான அமையச் செலவு ஒரு எல்லை வரை அதிகரித்து பின் வீழ்ச்சி
xiv) பொருளாதாரம் ஒன்று 50 சதவீத வளர்ச்சியடைதல்
xv) சர்வதேச வர்த்தகத்தினால் ஏற்படக்கூடிய பரிமாற்ற நன்மை

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உ/த) பரீட்சை - 2005

பகுதி 1

# கணக்கீடு

ஆசிரியர் : D. சாம்

**அறிவுறுத்தல் :**

**முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.**

**ஒவ்வொரு விடையும் புதியதொரு தாளில் ஆரம்பிக்கப்படல் வேண்டும். ஒவ்வொரு விடையுடனும் பொருத்தமான செயன்முறைகள் இணைக்கப் படல் வேண்டும்.**

1. (அ) பின்வரும் ஒவ்வொன்றும மெய்யானதா, பொய்யானதா என்று குறிப்பிடுக. விடையளிக்கும் போது வினாக்களின் இலக்கத்திற்கு எதிரே மெய்யானதா, அல்லது பொய்யானதா எனக் குறிப்பிட்டால் போதுமானது.

(i) ஒவ்வொரு பங்காளரும் பங்குடமையின் ஒரு முகவராவார். ஆதலால் ப[illegible]யின் பேரில் பங்காளர் ஒருவரால் செய்து கொள்ளப்படும் [illegible] மற்றப் பங்காளிகளையும் கட்டுப்படுத்துகின்றது.

(ii) பங்குடமையின் இலாப நட்டங்கள் பங்காளர்களுக்கிடையே எப்பொழுதும் பங்கிடப்படுவது அவர்களுடைய இலாபப் பகிர்வு விகிதத்தின் விகிதாசாரப்படியாகும்.

(iii) ஒருவரின் கூற்றின்படி பின்வருவன முன்வைக்கப்படுகின்றன.

(1) பங்காளிகளின் இலாபப் பகிர்வு விகிதத்தில் ஒரு மாற்றம் ஏற்படுதல்.

(2 தமது மூலதனமாகத் தமக்குச் சொந்தமான தனியுரிமை வியாபாரத்தை வழங்கும் ஒரு புதிய பங்காளியைச் சேர்த்தல்.

(3) பங்குடமையிலிருந்து அவருக்குச் சேரவேண்டிய தொகையை ஒரு இளைப்பாறும் பங்காளிக்குச் செலுத்துதல்

இவற்றில் ஒரு பங்குடமை வியாபாரத்தினது நன்மதிப்பின் பெறுமதியில் ஒரு மாற்றத்தை விளைவிப்பது (2) ஆவது ஆகும்.

(iv) பங்காளர் இளைப்பாறினால் பங்குடமைச் சட்டப்படி அவரின் கடன்தொகைக்கான வட்டி 5% என பிரிவு 44 குறிப்பிடுகின்றது.

(ஆ)

(i) கமல், கஸ்தூரி என்ற பங்காளிகள் இருவரில் ஒருவர் ரூபா 600, 000 என்ற அடிப்படையில் முதலீடு செய்தும் இலாப நட்டத்தை சமமாகப் பகிர்ந்தும் பங்குடமையினை இயக்குகின்றார்கள். 01.01.2002 இல் இக் பாலையும் கீழ்க்கண்ட நிபந்தனைகளில் பங்காளராக இணைக்கின்றார்கள்.

(1) பங்குடமைக்கு இக்பால் ரூபா 600, 000 அறிமுகப்படுத்துவார்.

(2) இக்பாலின் வரவின் பின்னர் பங்குடமையின் இலாப நட்டம் சமமாகப் பகிர்வது இக்பாலின் வரவினின் போது நன்மதிப்பு ரூபா 300, 000 மதிப்பிடப்படும். 01.01.2002 இல் ரூபா 250, 000 பெறுமானத்தில் காணப்படும் கட்டடம் ரூபா 400, 000 என மீள் மதிப்புச் செய்யப்பட்டது.

கீழ்கண்டவற்றை அனுமானித்துக் கொண்டு தேவையான நாட்குறிப்புப் பதிவுகளைத் தருக. (காசு உட்பட)

(அ) பங்குடமைப் புத்தகங்களில் இக்பாலின் வரவின் போது நன்மதிப்பு ரூபா 100 000 காணப்பட்டது. பங்காளர்கள் சொத்துக்களின் மீள் மதிப்பின் புதிய பெறுமானம் தரவுகளில் காட்டப்பட் வேண்டும் என விரும்புகின்றனர்.

(ஆ) இக்பாலின் வரவின் போது பங்குடமைப் புத்தகங்களில் காட்டப்பட்ட நன்மதிப்புக் கணக்கின் பெறுமதி ரூபா 300 000. சொத்துக்களின் புதிய பெறுமான மதிப்பு புத்தகங்களில் காட்டப்பட வேண்டுமென பங்காளர்கள் விரும்புகின்றனர்.

(இ) இக்பாலின் வரவின் போது நன்மதிப்புக் கணக்கு புத்தகங்களில் காட்டப்படவில்லை. பங்காளர்கள் புதிய சொத்துக்களின் பெறுமதி புத்தகங்களில் காட்டப்படுவதை விரும்பவில்லை.

(ii) ஆனந், ஜது, விது என்னும் மூவர் இலாபங்களையும், நட்டங்களையும் தம்மிடையே 5:3:2 எனும் விகிதத்தில் பகிர்ந்து கொள்ளும் பங்குடமை யொன்றில் சேர்ந்தனர். ஜது 2001 ஏப்ரல் 01 ஆந் திகதி பங்குடமையிலிருந்து ஓய்வு பெறத் தீர்மானித்தார். அதே தினத்தன்று அநுஷன் ஆனவர் ஒரு பங்காளராக சேர்த்துக்கொள்ளப்பட்டார். ஆனந், விது, அநுஷன் ஆகியோரி டையே புதிய இலாபப் பகிர்வு விகிதம்

முறையே 6:4:2 ஆக இணங்கிக் கொள்ளப்பட்டது. இரு பங்குடமை உடன்படிக்கைகளிலும் வணிகத்தின் நன்மதிப்பானது கடந்த ஐந்து ஆண்டுகளினதும் நிறையளித்த சராசரி ஆண்டுக்குரிய இலாபங்களின் ஈராண்டுக் கொள்வனவு விலையில் பெறுமானமிடப்பட வேண்டுமெனக் கூறப்பட்டிருந்தது. பொருத்தமான தகவல்கள் வருமாறு.

| | இலாபம்/நட்டம் | நிறை |
|---|---|---|
| 1996/97 ஆண்டு | 32 500 | 1 |
| 1997/98 ஆண்டு | 32 000 | 2 |
| 1998/99 ஆண்டு | 9 000 (வரவு) | 2 |
| 1999/00 ஆண்டு | 25 500 | 3 |
| 2000/01 ஆண்டு | 21 500 | 4 |

**வேண்டப்படுவது:-**

நன்மதிப்பைக் கணித்தல்

(ஈ) கணேஷ், ஹமீத், லொக்கு எனும் மூவர் தமது கணக்குகளை ஆண்டு தோறும் டிசம்பர் 31 வரை பூர்த்தி செய்யும் பங்குடமையொன்றில் சேர்ந்திருந்தனர். 2000 டிசம்பர் 31 இல் அவர்களது ஐந்தொகை.

| உரிமையும் பொறுப்புக்களும் | ரூபா | ரூபா | சொத்துக்கள் | ரூபா | ரூபா | ரூபா |
|---|---|---|---|---|---|---|
| உரிமை: | | | நடைமுறையல்லாச் சொத்துக்கள்: | | | |
| மூலதனக்கணக்கு: | | | | | | |
| கணேஷ் | 60 000 | | ஆதனம், பொறி, இயந்திரம், | | | |
| ஹமீத் | 30 000 | | உபகரணம்: | | | |
| லொக்கு | 30 000 | 12 000 | இறையில் கட்டவளவு | கிரயம் | திரண்ட பெறுமானம் | தேறிய மீதி |
| நடைமுறைக்கணக்கு: கணேஷ் | 10 000 | | மோட்டார் | 80 000 | 20 000 | 60 000 |
| | | | வாகனங்கள் | 40 000 | 24 000 | 16 000 |
| ஹமீத் | 6 000 | | | 36 000 | 16 000 | 20 000 |
| லொக்கு | (12 000) | 4 000 | ஆலுவலகப் பொறி | 156 000 | 60 000 | 96 000 |
| நடைமுறைப் பொறுப்புகள்: | | 12 000 | நடைமுறைச் சொத்துக்கள்: வியாபார இருப்பு | | | 16 000 |
| | | | கடன்பட்டோர் | | | 6 000 |
| கடன்கொடுத்தோர் | | 136 000 | வங்கி | | | 18 000 |

நிலையான சொத்துக்கள் கிரயத்தின் மீது பின்வருமாறு தேய்மானத் துக்கான ஏற்பாட்டைச் செய்வது பங்காளர்களின் கொள்கையாக இருந்தது.

| | | |
|---|---|---|
| இறையில் கட்டட வளவு | - ஆண்டொன்றிற்கு | 2.5% |
| மோட்டார் வாகனங்கள் | - ஆண்டொன்றிற்கு | 20% |
| அலுவலகப் பொறி | - ஆண்டொன்றிற்கு | 25% |

கணேஷ் சம்பளமாக ஆண்டொன்றுக்கு ரூபா 20 000 எனும் தொகையைப் பெற்றார். பங்காளர்களுக்கு முதல்களின் மீது ஆண்டொன்றிற்கு 10% படி வட்டி அனுமதிக்கப்பட்டது. இலாபங்களும் நட்டங்களும் பின்வருமாறு பகிரப்பட்டன. கணேஷ் 1/2, ஹமீத் 1/4, லொக்கு 1/4 2000 டிசம்பர் 31 ஆந் திகதியன்று கணேஷ் ஓய்வு பெற்றார். பங்காளர்கள் பின்வருவன தொடர்ப்ல் இணங்கினர்.

(i) மோட்டார் வாகனங்களுள் ஒன்றை ரூபா 8 000 எனும் பெறுமானத்தில் கணேஷ் எடுத்துக் கொள்ள வேண்டும். இவ் வாகனம் 2000 ஜனவரி 1 ஆம் திகதியன்று ரூபா 16 000 எனும் தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டது. கணேஷிற்கு அவரது ஓய்வுறலின் போது சென்மதியான தொகை யின் ரூபா 40 000, 2001 ஜூன் 30 ஆம திகதியன்று அவரது மூலதனக் கணககிலி ருந்து ஆண்டொன்றிற்கு 10% படியான வட்டியைக் கொண்ட கடன் கணக் கொன்றிற்கு மாற்றப்படுதல் வேண்டும். அவரது மூலதனக் கணக்கின் மீத அவருக்கு 2001 டிசம்பர் 31 ஆம் திகதியன்று செலுத்தப்படும்.

(ii) நலையான சொத்துக்கள் அத்திகதியில் பின்வருமாறு மீள்பெறு மானமிடப்படுதல் வேண்டும்.

இறையில் கட்டடவளவு ரூபா 120 000
மோட்டார் வாகனங்கள் (கணேஷ் எடுத்துக் கொண்ட வாகனம் தவிர) ரூபா 12 000 அலுவலகப் பொறி ரூபா 8 000

(iii) நன்மதிப்பு ரூபா 40 000 ஆகப் பெறுமானம் இடப்படும். ஆனால் அது ஏடுகளில் பதியப்படமாட்டாது

வேண்டப்படுவது:

(1) மூலதனக் கணக்குகளும் நடைமுறைக் கணக்குகளும் (நிரல் வடிவில்)
(2) 2001 ஜனவரி 1 இலான ஐந்தொகை.

(தொடரும்...)